# சம்மாந்துறை பிரதேச சபையின் 10 வது பொது கூட்டறிக்கை 2018.12.18

சம்மாந்துறை பிரதேச சபையின் 10 ஆவது அமர்வு 2018.12.18 ஆம் திகதி செவ்வாய் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப். ஏ.எம்.எம் நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. திரு. வீ. ஜெயச்சந்திரன் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப். ஐ.எல். நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப். எஸ்.எம்.எம். முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. ஜனாப். ஏ. அச்சி முஹம்மட் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. ஜனாப். யூ.எல். அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. திருமதி. ஆர். வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 08. திரு. என். கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப். ஏ.சி. முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப். எம்.ரீ. பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப். ஐ.எல்.எம். மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப். ஏ.எம்.எம் றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 13. ஜனாப். ஏ.எல்.எம். ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 14. ஜனாப். எஸ். நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. ஜனாப். ஏ. யூசுப் லெப்பை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி. கே.எம். இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 17. திருமதி. எம்.எஸ். சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 18. திருமதி. எஸ்.எம். சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 19. திருமதி. கே.எல். சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 20. ஜனாப். வை.பீ.எம். முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப். எம்.ஏ.கே. முஹம்மட் | செயலாளர் |
| 02. திருமதி. ஏ.எல். நுஸ்றத் பானு | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் இந்த 10 வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இன்றய சபை அமர்விற்கு கௌரவ உறுப்பினர் சரீபா அவர்கள் சற்று தாமதித்து வருவதாக அறிவித்துள்ளார்.

இந்த அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இந்தக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் பிரேரித்து ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த மாத கூட்டறிக்கையிலே என்னால் இந்த சபையில் பிரஸ்தாபிக்கப்படாத வார்தைகள் இடம்பெற்றிருக்கிறது. குறிப்பாக SLIATE நிறுவனத்தைப் பற்றியது. எனக்குக் கிடைத்த தகவலின் படி SLIATE புதுக்கட்டடத்தை கட்டுகின்ற கட்டட ஒப்பந்தக்காரர்கள்

விளையாட்டுக் கட்டடத் தொகுதியில் வாடகைக்குப் பாவிப்பதாகத்தான். அந்தத் தகவலின் அடிப்படையில்தான் நான் பேசினேன். நான் கூறாத விடயம் போடப்பட்டுள்ளது. கௌரவ தவிசாளர் அவர்களே, விளையாட்டுக் கட்டடத் தொகுதியில் SLIATE வகுப்புக்கள் இன்னும் இடம்பெறுகின்றதா? என்று நான் கேட்டதாக இங்கு அச்சிடப்பட்டுள்ளது. இந்தக் கேள்வி நான் கேட்கவில்லை. வகுப்புக்கள் என்ற வார்தை நான் உபயோகிக்கவில்லை. இது வெளியில் ஒரு தவறான கருத்தை கொண்டுவரும். எனவே, இதனை உடனடியாக திருத்த வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் நீங்கள் பேசாதவைகள் உள்ளடக்கப்பட்டிருந்தால் நிச்சயமாக மாற்றப்பட வேண்டும். அதில் மாற்றுக்கருத்து இல்லை. ஆனால் SLIATE பற்றி நாம் 02 வது சபை அமர்வில் தெளிவாக இதுதான் நடக்கின்றது இவர்கள் ஒரு வருடம் இருந்து 02 வது வருடத்திற்கு நீடிப்புப் பற்றி நாம் பேசிய போது வகுப்புக்கள் நடக்கின்றது என்று நான் தெளிவாகக் கூறியிருந்தேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அந்த நேரத்தில் கூட SLIATE புதுக்கட்டடத்தை கட்டுகின்ற கட்டடத்தின் ஒப்பந்தக்காரர்கள் விளையாட்டுக் கட்டடத் தொகுதியில் வாடகைக்கு இருப்பதாகத்தான் எங்களுடைய மனதில் இருந்தது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அவ்வாறு இருந்தால் மாற்றிக் கொள்ளலாம். ஆனால் எவருக்காகவும் அவைகளை சுமத்த வேண்டிய தேவை இல்லை. சில நேரம் நீங்கள் அந்த நேரத்தில் பேசியிருக்கலாம். ஆனால் 02 வது அமர்வு கூட்ட அறிக்கையை பார்தால் தெரியும். அது ஒரு சர்சையல்ல.

**கௌரவ உறுப்பினர் எஸ். எம். எம் முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பக்கம் 20 இல் எனது பிரேரனையில் 03ம் பந்தியில் நீதி மன்றத்திற்கு கொண்டு செல்கின்ற மண்கள் அருகில் உள்ள இடங்களில் போடப்படுகின்றது என்று மாற்றவேண்டும். அத்துடன் 21 ஆம் பக்கத்தில் தீர்மானத்தில் பிரேரித்தவர் கௌரவ உறுப்பினர் ஜிப்ரி என்பதற்குப்பதிலாக கௌரவ உப தவிசாளர் ஜிப்ரி என்று போடப்பட்டுள்ளது. அதனையும் மாற்றம் செய்ய வேண்டும்.

**தீர்மானம் 01**
சென்ற மாதக் கூட்டறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட திருத்தங்களோடு ஏற்றுக் கொள்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஆர். வளர்மதி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த மாதக் கூட்டத்தை நாம் தீர்மானித்த நாளில் எனக்கு சுகயீனம் காரணமாக இன்று ஒத்தி வைத்ததனால் உங்களுக்கு ஏதாவது அசௌகரியம் ஏற்பட்டிருந்தால் அதற்கு மன்னிப்புக் கூறியவனாக,

கிழக்கு மாகாண பிரதம அமைச்சு செயலாளரினால் தவிசாளர்களுக்கு ஆட்சேர்ப்பு விடயத்தில் அவர்களின் கட்டளையை மீறுவதாக ஒரு குற்றப்பத்திரம் வந்துள்ளது. நான் கொழும்பில் நிபுனர்களின் ஆலோசனைகளுடன் தொடர்புபட்டு 04 பக்கம் அடங்கிய ஒரு தெளிவான விளக்கத்தை செயலாளருக்கும், ஆளுனருக்கும், மாகாண சபைகள் அமைச்சின் செயலாளருக்கும், பிரதம செயலாளர்கள் உரியவர்கள் அனைவருக்கும் அனுப்பி வைத்திருக்கின்றேன். இதன் சாராம்சம் என்னவென்றால்,

நாம் எடுத்த முடிவின்படி பிரதேச சபையில் சிற்றூழியர்களை நியமிப்பதற்கு பிரதேச சபையைத் தவிர வேறு எவருக்கும் அதிகாரம் இல்லை என்பதை தெளிவாக நமது அரசியல் யாப்பு, சட்டம், அதன்பின் இடம்பெற்ற மாற்றங்கள் அனைத்தையும் உள்ளடக்கியதாக ஒரு கடிதம் அனுப்பியுள்ளேன். எவருக்காவது அதில் பிரதி தேவைப்பட்டால் அதைத் தருவதில் மகிழ்சியடைவேன். இது எனக்காக அல்ல உள்ளூராட்சி சபைகளின் அதிகாரம் எந்த வகையிலும் மாகாண சபையினால் மீளப் பெறக்கூடாது என்ற நோக்கத்திற்காகத்தான். எந்தத் தவிசாளரும் இதற்குரிய நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் நான் தைரியமாக நடவடிக்கை எடுத்ததற்குக் காரணம் எவராவது அதனை செய்யாவிட்டால், இது தொடர்ந்து செல்லும். சபையினால் வேலைகளை மேற்பார்வை செய்வதைத் தவிர வேறு எந்த ஒரு நடவடிக்கையையும் எடுக்க முடியாத நிலை வரும் என்பதனால்தான். ஆனால் கீழ் சபையிலிருந்து மேல் சபைக்கு இதுவரைக்கும் எவரும் சட்டத்தை எடுத்துக்காட்டவில்லை.

சென்ற மாதம் JAICA நிறுவனம் வறிய கிராமங்கள் அபிவிருத்தி என்ற திட்டத்தின் கீழ் 2013 ஆம் ஆண்டு கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் மாகாண சபையில் இருக்கும் போது, சம்மாந்துறை பிரதேச சபையில் வளத்தாப்பிட்டி, சென்னல் கிராமம் 01, 02 நெய்னாகாடு போன்ற கிராம சேவகர் பிரிவுகள் தெரிவு செய்யப்பட்டு ஏறத்தாள 13KM பாதைகள் இனங்கன்டிருந்தார்கள்.

மாகாண சபையின் இழுபறிகளால் விடுபட்டிருந்தது. அண்மையில் மாகாண சபையின் JAICA குழு வந்து பாதைகளை பார்த்து, பாதைகள் செய்திருந்தால் அவைகளை அடையாளப்படுத்தி அளவைகளில் குறைவில்லாமல் வளத்தாப்பிட்டியில் 02 பாதைகள், சென்னல் கிராமத்தில் 01, 02 க்கும் பொதுவாக இருக்கின்ற பாதைகள், குறுக்குப் பாதைகள் அனைத்தும், நெய்னாகாட்டில் 500M பாதை போன்றவைகள் இணங்கானப்பட்டுள்ளது. நில அளவையாளர் ஜனாப். மௌறுப் அவர்களிடம் பேசும் போது சம்மாந்துறையில் சென்னல்கிராமத்தில் பிரதான பாதைகள் அனைத்தும் 07M அகலத்தில்தான் போடப்பட்டுள்ளது என்றார். இந்த சபையைப் பொறுத்தவரையில் 1969 ஆம் ஆண்டின் பட்டின சபை பிரதேசத்தின் நில அளவைப் படம் உள்ளது. அதனைப் பார்தால் உங்களுக்கு நமது பிரதேசம் பற்றி விளங்கிக் கொள்ளலாம். ஏதாவது காணிப்பிரச்சினைகள் வந்தால் அதனைப் பார்கலாம்.

அதேபோல் 02 இலட்சத்திற்கு மேல் செலவு செய்து நில அளவை திணைக்களத்தில் இருந்து தற்போது செய்கின்ற அனைத்து வரைபுகளையும் எடுத்து சபையில் வைத்துள்ளோம். பாதைகளைப் பொறுத்தவரையில் ஊருக்கென்று ஒரு சரித்திரம் உள்ளது. நிர்வாகங்கள் மிகவும் தெளிவாக முடியுமானவரை அகலமாக பாதைகளைத் திட்டமிட்டு எதிர்காலத்தை நோக்கி செய்துள்ளது.

பிரதேச சபைக்குச் சொந்தமான பாதைகள் முன் அறிவித்தல் இன்றி பிரதேச செயலகத்தினால் அபிவிருத்தி செய்வதற்கு அரசியல் அதிகாரத்திற்கு முன் மொழியப்படுகின்றது. ஊருக்கு வருகின்ற அபிவிருத்தியை தடுக்கக்கூடாதென்ற நிலைப்பாட்டில் நாம் ஆட்சேபனை இன்றி பாதைகளை செய்வதற்கு அனுமதி கொடுத்திருக்கின்றோம். இவை செயற்படுத்தப்படும் போது பல சிக்கல்கள் ஏற்படுவதை நீங்கள் நன்கறிவீர்கள். பிரதேச சபை ஒரு பாதையை அபிவிருத்தி செய்ய முன்னெடுக்கும் போது அந்த இடத்திற்குச் சென்று களப்பரிசோதனை செய்து மக்களின் கருத்துக்களை உள்வாங்கி பிரச்சினைகள் இருந்தால் அவைகளைத் தீர்க்கும் வகையிலேதான் மதிப்பீட்டறிக்கை செய்கின்றோம். இதனால்தான் சபை வேலைகளில் தடைகள் வருவதில்லை.

அண்மையில் கம்பரலிய வேலைத்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட ஏறத்தாள 35 வேலைகளில் 11,12 வேலைகளில் பிரச்சினை எழுந்துள்ளது. அதாவது மோசமாக உள்ள பாதைகளை விட்டுவிட்டு நல்ல பகுதிகளை செய்வது, பாதைகளில் இருக்கும் தடைகளை அகற்றாமல் வேலைகளைச் செய்வது இவைகள் இறுதியில் நமது சபை பாரம் எடுக்கும் போது அதனால் வருகின்ற பிரச்சினைகளுக்கு நாம் பொறுப்புதாரியாகின்றோம்.

எனது கருத்துப்படி நாம் பிரதேச செயலகத்திற்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அபிவிருத்தி வேலைகளைச் செய்யும் போது இந்த வரையறைக்குள்தான் செயற்பட வேண்டும் என்ற

விதிமுறையை அமைத்தால் தான் அதனை நாம் ஒழுங்கு படுத்தலாம். நாம் இனங்காணும் வேலைத்திட்டங்களைத் தவிர அவர்கள் இணங்காணும் வேலைத்திட்டங்களில் சபையின் முன் அங்கீகாரம் பெற்று சபையினூடாக மதிப்பீடுகளை தயாரிக்கும் போது நாம் ஏற்படக்கூடிய பிரச்சினைகளைத் தீர்கலாம். ஆனால் அவைகளை செய்வதற்கு முன் பிரதேச சபையின் அபிப்பிராயங்களை எடுத்து எமது தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பங்களிப்புடன் மதிப்பீட்டறிக்கை தயாரிக்கப்பட்டு வருமானால் இவ்வாறான பிரச்சினைகள் வராது.

சபை உருவாகியதன் பின் ஒவ்வொரு வேலையையும் கௌரவ உறுப்பினர்கள் சென்று மேற்பார்வை செய்கின்றனர். நானும் தனியாக சென்று பார்வையிட்டுள்ளேன். காரணம் கொங்றீட் போடப்பட்டதன் பின்பு அதனைத் திருத்த முடியாது. இவ்வாறான விதிமுறைகளை எழுதி பிரதேச செயலகத்திற்கும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பி வைப்பதற்காக சபையின் அனுமதியைக் கோருகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம் முஸ்தபா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அந்தக் கடிதத்தில் பாதைகள் அமைக்கப்படுகின்ற போது நடைமுறையில் நாங்கள் எதிர் கொள்கின்ற அல்லது கண்ணூடாக கானுகின்ற ஒரு பிரச்சினைதான் பாதைகள் அமைக்கப்படுகின்ற போது கொங்றீட் போடுவதற்கான Width எவ்வளவு என்றும், அதற்கான இடைவெளியையும் கொடுக்கின்றார்கள். அந்த அளவுக்கு போடப்பட்டு முடிந்தவுடன் அருகில் இருக்கின்ற குடியிருப்பாளர்கள் அந்தப் பாதையுடைய எல்லையாக கொங்றீட் போட்ட எல்லையை எடுக்கின்றார்கள். எனவே இது நீண்டகாலப் போக்கில் எமது எதிர்கால சமூகத்திற்கு பாதைகள் அனைத்தும் காத்தான்குடி, சாய்ந்தமருது ஒழுங்கைகள் போன்றுதான் வந்து சேரும்.

கௌரவ தவிசாளர் குறிப்பிட்டது போன்று சென்னல் கிராமம் 01,02 இல் நில அளவை திட்டத்தின் வரைபடங்களுக்கு அமைவாக பாதைகள் ஒவ்வொன்றும் 07M அகலம் கொண்ட பாதைகளாக இருக்கின்றது. ஆனால் எவ்வளவு அகலத்தில் இருக்கின்றது என்பதனை இன்று நாம் கன்னூடக பார்க்க முடியும். பாதைகள் அமைப்பதற்கு முன் பாதைகளுக்கான திட்டமிடல்கள் செய்யப்படுகின்ற போது முதலில் செய்யப்பட வேண்டியது இரு பக்கங்களுக்கும் கான்கள் கட்ட வேண்டும். அதன் பின்னர் தானாகவே எல்லைகளுக்குள் பாதைகள் சீர் திருத்தப்படும். கான் கட்டுப்பட்டால் அவர் அவர் எல்லைகள் சீர்படுத்தப்படுவதால் பாதைகள் செப்பனிடுவதற்கான வாய்ப்புக்கள் அதிகமாக இருக்கின்றது. எனவே, கௌரவ தவிசாளர் அவர்கள் கூறியது போன்று அந்தக் கடிதங்களை எழுதும் போதும் எந்தந்த வீதிகள் போடப்படுகின்றதோ அங்கு கானுக்கான எல்லைகளை சீரமைக்க வேண்டும். என்ற விடயமும் உள்வாங்கப்பட வேண்டும் என்று நான் சமர்ப்பிக்கிறேன்.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது ஊரில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற கம்பெரல்ய வேலைத்திட்டம் தொடர்பாக பல தடவைகள் கௌரவ தவிசாளர் உட்பட உறுப்பினர்கள் பிரதேச செயலகத்திற்கு சென்று வரும் போது அந்தந்த வட்டாரங்களில் வேலைகளை மேற்கொள்ளும் போது அந்தந்த வட்டார உறுப்பினர்களையும் அனுகி அவர்களுடைய ஒத்துழைப்போடு வேலைகளை செய்து முடிக்க வேண்டும் என்ற வேண்டுகோள் விடுத்தும், எமது ஊரில் அனைவரும் பல பல கட்சிகளின் உறுப்பினர்களாக இருந்தாலும் அனைவரும் ஒற்றுமையாக நமது ஊருக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணப்பாடு பேச்சளவில் தான் இருக்கின்றது. நடைமுறையில் கானவில்லை. உதாரனமாக எனது வட்டாரத்தில் கம்பெரலிய வேலைத்திட்டத்தின் கீழ் கல்லரிச்சல் 03 இல் மல்கம்பிட்டியர் வீதி எனப்படும் பாதை, மலையடிக் கிராமம் 01 இல் குத்தியர் வீதி என்ற பாதை குறிப்பிட்ட இடத்தில் இருந்துதான் ஆரம்பிக்கப்பட வேண்டும் என்று நான் கூறியும் சீராக இருந்த பாதையை வெட்டியிருந்தார்கள். சேதமாக்கப்பட்ட பாதை விடப்பட்டுள்ளது.

அதே இடத்தில் கல்லரிச்சல் 03 இல் மல்கம்பிட்டியார் வீதி எனப்படும் பாதைக்கு கௌரவ உறுப்பினர் யூசுப் லெவ்வை அவர்கள் Block Paving செய்யப்பட்ட விடயத்தின் காரணமாக அந்தப் பாதையை வேறு ஒரு இடத்திற்கு பாதையாக புனரமைக்க எத்தனித்த போது நான் குறிப்பிட்

வீதியை சுட்டிக்காட்டி இதுவும் மல்கம்பிட்டியார் வீதிதான் என்று அடையாளம் காட்டியும் அதனை அவர்கள் உள்வாங்காமல் அவர்கள் நினைத்த கஸ்ஸாலி வீதிக்கு அந்தப் பாதையை செய்வதற்கு எனது வேண்டு கோளுக்கு அப்பால் மீறி அவர்களுடைய இஸ்டத்திற்கு வீதியை வெட்டிவிட்டார்கள். நான் இது சம்பந்தமாக பிரதேச செயலகத்திற்கு கடிதம் எழுதி கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் MIM. மன்சூர் அவர்களுக்கும் கௌரவ தவிசாளருக்கும் பிரதியை அனுப்பியிருக்கின்றேன். இந்த இடத்தில் அனைவரும் வந்து பார்வையிட்டு நான் கூறியது நியாயமான முறையில் இருந்தும் அதனைச் செய்தால் தோற்று விடுவோமோ என்ற காரணத்தினாலும், நீ பெரிதா? நான் பெரிதா? என்ற எண்ணப்பாட்டிலும் இதனை செய்தால் செய்வது இல்லாவிட்டால் அதனை திருப்பி விடுவது என்ற நோக்கத்தில் வேலைகள் செய்யாமல் விடப்பட்டுள்ளது.

அது மாத்திரமல்ல மலையடிக் கிராமம் 01 ம் பிரிவில் பாதையின் நடுப்பகுதியில் 05M வீதி வந்து 03 ம் சந்தியில் 04M ஆக மாறுகின்றது. அங்கே வசிக்கின்ற ஓர் ஆசிரியர் பக்கத்தில் இருக்கின்ற பொதுவைத் தாண்டி 1½ அடி மேலதிகமாக வீதியை சேர்த்துப் போட்டிருக்கின்றார். இது விடயமாக பார்பது பிரதேச சபைதான். இவர்கள் நினைத்தவாறு நினைத்த வேலைகளை எங்களுக்கும் சபைக்குத் தெரியாமலும் செய்து கொண்டு போனால் இதற்கு மறுமொழி சொல்வது எவ்வாறு?

இவ்வாறு வட்டாரத்திற்குள் நடக்கின்ற வேலைகள் அந்ததந்த வட்டார உறுப்பினர்களுக்குத் தெரிவதில்லை. வட்டார உறுப்பினராக இருந்து கொண்டு உங்களுக்குத் தெரியாவிட்டால் நாங்கள் எவ்வாறு உங்களுக்கு வாக்களிப்பது? என்று மக்கள் எங்களிடம் கேட்கின்றனர் எனவே இதற்கான முடிவை சபை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்தக் கருத்துக்களை உள்வாங்கித்தான் கடிதம் பற்றிக் கூறினேன். ஏனென்றால் நீங்கள் கூறிய விடயத்தில் நியாயம் உள்ளது. உங்கள் வட்டாரத்தில் எந்த வேலையாவது நடக்குமானால் உங்களுக்கு அந்த அறிவித்தல் இல்லாவிட்டால் அது சரியாக இருக்காது. எதிர்காலத்தில் இந்தத் தவறுகள் ஏற்படாமல் நாம் இந்தக் கடிதம் மூலம் இவைகளுக்கு நிவர்த்தி செய்வோம். நீங்கள் தடுத்த பாதை விடயமாக கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் என்னுடன் பேசினார் அவரின் முயற்சியினால் கொண்டு வந்த பாதைகளில், எதுவும் குறைகள் இருக்கக்கூடாது என்ற காரணத்திற்காக நான் அவைகளுக்கு அனுமதி வழங்கி உத்தியோக பூர்வமாக கடிதம் மூலம் அந்த முன்மொழிவினை விடுத்திருக்கின்றேன். எதிர்காலத்தில் இவ்வாறான சர்ச்சசைகள் நமக்கு வரத் தேவையில்லை.

நீங்கள் தனிப்பட்ட முறையில் அரசியல் செய்யலாம். ஆனால் சபையில் நாம் அவருக்குக் அதிகம் இவருக்கு குறைவு என்ற வேறுபாடு இல்லாமல் யார் யார் முயற்சி எடுத்து கொண்டு வருகின்றார்களோ அதற்குத் தடையாக இல்லாமல் நன்றாக அந்த வேலைகளை செய்து முடிக்க வேண்டும் என்ற ஒரே ஒரு நோக்கில் தான் இந்த சபை இயங்குகின்றது.

**கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம். சஹீல் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அஸ்வர் அவர்கள் கூறியவாறு சகல வட்டார உறுப்பினர்களின் கருத்துக்களை உள்வாங்க வேண்டும். காரணம் மக்கள் எங்களிடம்தான் அந்தப் பொறுப்புக்களை சுமத்தியிருக்கின்றார்கள். அதற்காகவே எங்களை தெரிவு செய்திருக்கின்றார்கள். மக்கள் தருகின்ற மனுக்கள் அடிப்படையிலே நாங்கள் அந்த வீதியில் இருக்கின்ற பிழைகைளை நேரடியாக சென்று பார்கின்ற போது எங்களுக்கு பல அச்சுறுத்தல்களை விடுக்கின்றனர். அண்மையில் எங்களால் தீர்வு காண முடியாத விடயத்திற்கு எங்களுடைய சபையின் செயலாளர் அந்த விடயத்தை தீர்க்கச் சென்ற போன போது அவருக்காக அவ்விடத்தில் பல அச்சுறுத்தல்களை விடுத்தார்கள். இதனை வண்மையாகக் கண்டிக்க வேண்டும். காரணம் நாங்ககள் அந்த மக்களினால் தெரிவு செய்யப்பட்ட பகுதியில் இருந்து வந்தவர்கள் அதன் அடிப்படையிலேயே எங்களது மக்களுடைய பிரச்சினைகளை நாங்கள் சென்று பார்வையிட வேண்டும்.

இன்று வீதிகள் போடுகின்றார்கள். உடங்கா - 01 இல் குறைசினார் வீதி மழை வந்தால் பாரிய வெள்ள அனர்த்தமாக மாறுகின்றது. வீதியில் அரைகுறையாக கொங்றீட் இடப்பட்டிருக்கின்றது. அந்தக் கொங்றீட் தொடர்ச்சியாக செல்ல வேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்த போது என்னைக் கொலை செய்வேன் என்று மிரட்டல் கூட வந்தது.

இந்த சபை அதனை வண்மையாக் கண்டிக்க வேண்டும். காரணம் மக்களுடைய குறைகளைத் தீர்க்க வேண்டும் என்றே நான் இந்த சபையில் இருக்கின்றேனே தவிர அவர்களுடைய கொந்தறாத்துக்காகவேண்டி, அவர்கள் செய்கின்ற வீண் விரயங்களை பார்த்துக் கொண்டிருக்க முடியாது. அதன் அடிப்படையில் அம்பாரை 12A வீதியில் அண்மையில் கல்லிட்டு மேலால் தார் இட்டார்கள். அதற்கு 04 மில்லியன் செலவிட்டதாக நான் அறிகின்றேன். ஆனால் அந்த வீதிக்கு மேலால் கம்பெரலிய திட்டத்தினூடாக கொங்றீட் இடுவதற்கான ஆயத்தம் செய்த போது நாங்கள் அதனை தடை செய்திருக்கின்றோம். கௌரவ தவிசாளர் அவர்களிடம் நான் குறிப்பிட்டிருந்தேன். காரணம் அந்தந்த வீதிகளுக்கு வருகின்ற வேலைகளை அவைகளுக்குத்தான் செய்ய வேண்டும். இருந்தாலும் இவர்கள் செய்கின்ற ஊழல் வேலைகளுக்கு மீண்டும் மேலால் கொங்றீட் இடுவதனால் மக்களின் பணம் வீண்விரயமாகின்றது. இவைகளை முற்றாக தடை செய்து உரிய வீதிக்கான மதிப்பீட்டறிக்கைகளை தயாரிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இதே போன்று வீரமுனை 02 இல் வக்கடி லேன் என்று கூறப்படுகின்ற பகுதி மிகவும் மோசமாகக் காணப்படுகின்றது. அதனை கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்கள் சென்ற கூட்டத்திலும் கூறியிருந்தார். அந்தப்பாதை தேவையான இடத்தில் செய்யப்பட வில்லை. அது தொடர்பாக நான் உரிய இடத்திற்கு சென்று பார்வையிட்டு கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களிடம் கூறினேன். அப்போது அங்கிருந்தவர்கள் முஸ்தபா லோயருக்கும் இதுக்கும் என்ன சம்மபந்தம் என்று கேவலமாக கொந்ராத்துக் காரர்கள் பேசினார்கள். அத்தோடு அந்தப் பிரதேச மக்களும் பாதையில் இறங்கி பாதை போட விடமாட்டோம் என்று தடுத்தார்கள். இருந்தும் அப்பாதை போட வேண்டிய இடத்தில் போடப்பட வில்லை. இது மிகவும் மனவருத்தத்திற்குரிய விடயம். அதில் கூடுதலாக முஸ்லிம் மக்கள்தான் பிரயோசனப்படுத்துகின்றார்கள். 04 தமிழ் குடும்பங்கள்தான் உள்ளது.

ஆண்டிர சந்தியில் மாட்டுக்காலை இருப்பதனால் துர்நாற்றம் ஏற்படுகின்றது. அவர்களும் மாடு வளர்க்கத்தான் வேண்டும். ஆனால் இதனால் மக்களுக்கு பல அசௌகரியங்கள்கள் ஏற்படுகின்றது. எனவே அந்தக் காலையை அந்த வளவுக்குள் சற்று தூரத்தில் மாடுகளை நகர்த்துவதற்குரிய ஏற்பாடுகளை செய்வதற்கு ஆவண செய்யுமாறு கௌரவ தவிசாளர் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம் முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்கள் கூறியது போன்று வக்கடி லேனில் குறுக்குப்பாதை இடம்பெறுகின்ற போது என்னுடன் தொடர்புபட்டுக் கூறினார். நான் உடனடியாக கொந்தராத்து செய்கின்றவர்களை தொடர்பு கொண்டு பேசினேன். கௌரவ பாராளுமன்ற உறுப்பினரிடமும் தொடர்பு கொண்டு பேசினேன். மதிப்பீட்டறிக்கை வந்த போது இதனையும் செய்வோம் என்று கூறினார்கள். சென்ற சபையிலும் கூறியிருந்தேன். அது யாராக இருந்தலும் சரி வக்கடி லேன் முடிக்கப்பட்டிருக்கின்ற இடத்தைப் பார்கின்ற போது ஊருக்கே ஓர் அவப்பெயர் போல் உள்ளது. ஏற்கனவே நாங்கள் சகோதரப் பாங்குடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். ஆனால் அந்த வீதி போடப்பட்டிருக்கின்ற முறை மிகவும் அசிங்கமான அடையாளமாக உள்ளது. ஏதாவது ஒரு திட்டத்தின் கீழ் வக்கடி லேனை சம்பூரணமாக அவசரமாக முடிக்க வேண்டும் என்று வினயமாக வேண்டிக் கொள்கின்றேன்.

**தீர்மானம் 02**

பாதைகளை அபிவிருத்தி செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகள் பற்றியும் பிரதேச சபையின் அபிப்பிராயங்களையும் பெற்று, தொழில்நுட்ப உத்தியோகத்தரின் பங்ளிப்போடு மதிப்பீட்டறிக்கை தயாரிக்கப்பட்டு அபிவிருத்தி வேலைகளை நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற விதிமுறைகள் அடங்கிய கடிதத்தினை பிரதேச செயலகத்திற்கும், கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அனுப்பிவைக்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அதனை உள்வாங்கியவனாக, SLIATE தொடர்பாக நீங்கள் அனைவரும் அறிந்திருப்பீர்கள். நேற்று என் கைக்கு கிடைத்த கடிதத்தின் பிரதியை உங்கள் எல்லோருக்கும் தந்துள்ளேன். உண்மையில் இது ஒரு அரச நிறவனம். அரச நிறுவனங்களுக்கு அவர்ககளின் செயற்பாடுகளை செய்வதற்கு ஒரு வரவு செலவுத்திட்டம் இருக்கின்றது. அவர்கள் அதனை வைத்துக் கொண்டு அதற்குரியவாறு இடங்களைத் தேடி அந்த நிறுவனத்தைக் கொண்டு போவது அந்த இணைப்பாளரின் கடமை. ஆரம்பத்தில் ஓய்வூதியக் காரியாலயத்தில் நடந்த வகுப்புக்கள் இன்று ஏறத்தாள ஒரு வருட காலத்து வாடகை நிலுவை இருந்தும் அந்தக் கட்டடத்தை பராமரிக்கவில்லை என்ற பெரிய குற்றச்சாட்டும் உள்ளது.

சம்மாந்துறை பிரதேச சபையின் கண்கானிப்பில் இருக்கும் விளையாட்டுத் தொகுதியில் உள்ள கூட்ட மண்டபம் அத் தொகுதியின் ஓர் அம்சம். SLIATE நடவடிக்கைகளுக்காக, கல்விக்காக அதனைக் கொடுப்பதில் எனக்கோ அல்லது இந்த சபைக்கோ ஆட்சேபனை இல்லை என்று நினைக்கின்றேன். ஆனால் விளையாட்டுக் கட்டடத் தொகுதியை நடாத்துவதற்கும், நமது நடவடிக்கைகளுக்கு இந்த வகுப்பு நடப்பது பெரும் தடையாக உள்ளது. சனி, ஞாயிற்று கிழமைகளில் நாம் மக்களின் வேண்டுகோளுக்கு அந்த இடத்தைக் கொடுக்காவிட்டால் அதுவும் ஓர் விமர்சனமாக வரலாம். இதனால் அவ்விடத்தில் வகுப்பு நடாத்துவதற்கு பொருத்தமில்லாத இடம். அதனால் நமது விளையாட்டுக் கட்டத்தொகுதியின் நடவடிக்கைகளுக்கு தடையாக இருக்கின்றதற்காகத்தான் இரண்டாவது சபையில் தீர்மாணம் எடுத்தோம். செப்டம்பர் மாதம் 23 ஆம் திகதி வரையும் நீடித்துக் கொடுப்போம் என்ற முடிவெடுத்து அந்த வாடகையை நீர், மின்சார கட்டனத்தோடு 60,000 ரூபாவாக அதிகரித்து நாம் கொடுத்திருந்தும், ஏறத்தாள 11 மாதங்களாக எந்த ஒரு கட்டணமும் செலுத்தாமல் தொடர்ந்து நடாத்திக் கொண்டிருந்தது.

நாங்கள் பல தடவைகள் பேசியும் அவை கைகூட வில்லை. செப்டம்பர் மாதம் 23 ம் திகதி கழிந்தும், ஒக்டோபர் மாதத்தில் நாம் அந்த முடிவை எடுத்து அதன் பின் சபைக்கும், சபை நடவடிக்கைகளுக்கும் பாராளுமன்ற உறுப்பினரின் உதவியோடு அதனை மீற வேண்டும் என்ற ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் என்னிடம் பேசினார். நான் அவருக்கு தெளிவாக விளங்கப்படுத்திக் கூறியது இது நௌசாட்இன் தனிப்பட்ட முடிவல்ல. சம்மாந்துறை பிரதேச சபையின் முடிவு. சம்மாந்துறை பிரதேச சபையின் நடவடிக்கைகள் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் விடயங்கள் சம்மாந்துறை பிரதேச சபையின் வளம் சம்மாந்துறைக்கு நஸ்டம் வரும் அளவில் SLIATE க்கு கொடுக்கப்படுவதை, ஏன் நாம் அதனை அவர்களுக்கு கொடுக்கின்றோம் என்ற ஒரு கணக்காய்வும் இருக்கின்றது. அதற்காகத்தான் நாம் சபையில் முடிவெடுத்தது. பிரதேச சபை இந்த ஊரின் மாணவர்களின் கல்வியைக் கருதி ஊருக்கும், மாணவர்களுக்கும் செய்கின்ற சேவையாக்க கருதி அதனை நீடித்துக் கொடுத்தோம்.

அந்தப் பிரச்சினை தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் பேசிய போது நான் கொழும்பில் நின்று அடுத்தநாள் SLIATE காரியாலையத்திற்கு சென்று ஒப்பந்தத்தில் கையெப்பமிட்டு கொடுத்து டிசம்பர் 23 வரையும் நீங்கள் அதனை நடாத்துங்கள் ஆனால் முதலில் நீங்கள் நிலுவைப்பணத்தை கட்டி முடிக்க வேண்டும் என்றும் கூறினேன். 540,000 ரூபா இன்னும் கட்ட வேண்டும். இன்று அவர்கள் மார்ச் வரைக்கும் நீடித்து கேட்கின்றனர். இதனைக் கொடுப்பதில் எனக்கு ஆட்சேபனை

இல்லை. ஆனால் சபையின் கட்டுப்பாடுகளுக்கும் மதிப்பளிக்க வேண்டும். இந்த ஒப்பந்தம் முடிவடைவதற்கு முன் நிலுவைப்பணங்கள் செலுத்தப்பட்டால் ஜனவரி மாதம் 15 ஆம் திகதிக்கு முன் நீடிப்பு கேட்கும் 03 மாதங்களின் கட்டனத்தை செலுத்தினால் நாங்கள் மார்ச் 23 ஆம் திகதி வரை அவர்கள் கேட்பது போல் நாம் இதனைக் கொடுக்கலாம் என்ற ஒரு முடிவை எடுக்கலாம் என்பது எனது அபிப்பிராயம்.

மாற்றுக் கருத்துக்கள் இருக்குமானால் நிச்சயமாக அதனை ஏற்றுக் கொள்ளலாம். கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியது போல் இதனை அரசியலாக்காப்பார்கின்றனர். ஆனால் இது அரசியல் அல்ல. அவர் பிழையாக விளங்கிக் கதைத்திருந்தால் அது பிரச்சினையல்ல. காரணம் இந்த சபைக்குள் ஒரு முடிவு எடுத்தால் எந்தக் கட்சியின் பிரதிநிதியாக இருந்தாலும் வெளியில் இருந்து அதற்கொரு சவால் வர முடியாது. அதனை இந்த சபைதான் தீர்மானிக்க வேண்டும். சபை நடவடிக்கைகளில் பாராளுமன்ற உறுப்பினர்களோ, வேறு எவரோ திணிக்க முடியாது என்ற நிலையில் நான் உறுதியாக இருப்பவன். ஏனென்றால் இது ஒரு கௌரவ சபை. குட்டி அரசாங்கம்.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ பௌசுள்ளாஹ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது வரவேற்கத்தக்க விடயம் நமக்குத் தரவேண்டிய 540,000 ரூபா பணத்தை செலுத்திவிட்டு எதிர்வரும் மார்ச் மாதம் வரை நீடித்துக் கொடுப்பதில் எந்த ஆட்சேபனையும் இல்லை என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ். நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, SLIATE நிறுவனம் எமது ஊரில் இருக்கின்ற மாணவர்களை வழிநடாத்திச் செல்லக்கூடிய களமாக அமைந்திருக்கின்றது. ஆனால் அவர்கள் எங்களுக்கு தரவேண்டிய வாடகைப்பணத்தை தந்தால் அவர்கள் கேட்கும் 03 மாத கால நீடிப்பை கொடுத்து மாணவர்களின் கல்வியை ஊக்குவிப்பதற்கு ஒரு வளியாகச் செய்யலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நான் டிசம்பர் 23 என்று கூறியதற்குக் காரணம் நாம் எல்லை இல்லாமல் நீடித்துக் கொண்டு போனால் அவர்களின் வேலையும் தாமதமாகும். என்முன்னிலையில் DDG இணைப்பாளரிடம் கூறினார் தவிசாளர் அவர்கள் நமது காரியாலயத்திற்கு வந்து டிசம்பர் 23 ம் திகதி வரைக்கும் உடன்பட்டுள்ளார் அதற்கிடையில் மாற்று இடம் தேடுங்கள் என்று கூறினார்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் மேற்கொண்ட நடவடிக்கைகளும் அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் பற்றியும் இக்கடிதத்தில் விபரித்திருக்கின்றார்கள். டிசம்பர் மாதம் வரையிலான நிலுவைப்பனத்தை செலுத்தலாம். நாங்கள் இவ்வளவு காலமும் பொறுத்திருக்கின்றோம். அவர்கள் இந்த இடத்தில் இருந்து போகின்றபோது சந்தோசமாக போக வேண்டும். அதற்கான ஓர் ஏற்பாட்டையும் நாம் செய்ய வேண்டும். உண்மையில் கல்வி கற்கின்ற இடம் எங்களது ஆளுகைக்குட்பட்டது என்று போனோமானால் அந்தப் பிள்ளைகள் வேறு இடங்களுக்கு அதாவது அம்பாரைக்குத்தான் செல்ல வேண்டும். தற்போது இருக்கின்ற காலகட்டத்தில் பெண் பிள்ளைகள்தான் அதிகமாக கல்வி கற்பதை நான் பார்த்தேன். அந்தவகையில் நீங்கள் கூறியது 100க்கு 100 வீதம் பொருத்தமானது.

அவர்கள் அந்தப்பணத்தை தருவதற்குரிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். ஏற்கனவேயும் இக்கட்டடத்தையும், இடத்தையும் இல்லாமல் செய்வதற்கு வெளிவாரியான முயற்சிகள் நடந்தும் ஏதோ ஒரு வகையில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினரின் முயற்சியினால்தான் கட்டடம் கட்டப்பட்டு முடிவுறும் தறுவாயில் உள்ளது. அதற்குள் நம்மிடம் இருந்தவர்கள் முரன்பட்டுக் கொன்டு செல்ல விடாமல் அவைகளை உள்வாங்கி எந்த ஒரு தவிசாளரும் செய்யாத வகையில் நீங்கள் நேரில் சென்று பங்களித்ததற்கு நாங்கள் உங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு அவர்கள் அந்தக் கட்டடத்தை இந்த வருடத்திற்குள் தந்தால், குறிப்பிட்ட காலத்திற்கு சபையில் எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல் ஏகமனதாக முடிவெடுத்ததாக அவர்களும் விளங்கிக்க கொண்டு

கல்விக்கு துணை போகும் சபையாக இருக்கின்றது என்பதையும் அவர்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

பாதை தொடர்பான பிரச்சினைகளைப் பேசியிருந்தீர்கள். அது தொடர்பாக ஒரு விடயத்தை நான் கூற வேண்டும். சம்மாந்துறை பிரதேச சபையின் எந்த ஓரு இடத்திலும் வேலைகள் நடந்தால் அதன் முழுப்பொறுப்பும் இந்த சபைக்கு வர வேண்டும். ஒரு நல்ல வேலையை எவர் செய்தாலும் நாம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். அதே நேரத்தில் தீய வேலையை எவர் செய்தாலும் அதனை நாங்கள் ஒட்டு மொத்தமாக தடை செய்ய வேண்டும். இந்த சபைக்குள் நாம் வந்தவுடன் இந்தப் பாகுபாடு இன்றி விட்டுக் கொடுப்புடன் செயற்பட வேண்டும். அவ்வாறுதான் இந்த சபை நடந்து கொண்டிருக்கின்றது.

**கௌரவ உறுப்பினர் வை.பீ.எம். முஸம்மில் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, SLIATE சம்பந்தமாக பேசும்போது அதனை எழுப்ப வேண்டும், 03 மாதம் நீடிப்பு கொடுக்க வேண்டும் என்பது பற்றிப் போசுகின்றோம். அந்த இடம் எங்கு மாறிப் போகும் என்பதனையும் நாம் சிந்திக்க வேண்டும். இதில் ஏதாவது பிழைகள் ஏற்பட்டால் நாம்தான் இவர்களை எழுப்பி விட்டோம் என்ற பெயர்களும் வரலாம். அதாவது நமது ஊரில் அதிகமான பெண் பிள்ளைகள் கல்வி கற்கின்றனர். அவர்கள் நமது நிலுவைப்பணத்தை தந்து மீண்டும் 03 மாத காலம் நீடித்துக் கொடுத்து விட்டு காலம் முடிவடைந்ததும் மீண்டும் அவர்ககள் எங்கு செல்வார்கள் என்று நாம் சிந்திக்க வேண்டும்.

ஏனென்றால் அந்தப் பிள்ளைகள் அம்பாரை அல்லது வேறு இடங்களுக்குச் சென்றால் அங்கு ஏதாவது பாதிப்புக்கள் ஏற்பட்டால் இந்த சபைதான் எங்களை எழுப்பினார்கள் அதனால்தான் இது நடைபெற்றது என்ற ஒரு பெயரைக் கேட்க வேண்டி வரும். இதனையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டி வரும். இதற்கு மாற்று இடத்தைப் பெற்றுக் கொடுக்க முடியுமானால் அதனைப் பெற்றுக் கொடுப்பது அல்லது அவர்களுக்கு தொடர்ந்து 03 மாதத்திற்கு பணம் செலுத்துவது போன்றோ ஏதாவது அமைப்பொன்று வருமானால் அதனை நமது சபையினால் அவ்விடத்தை அமைத்துக் கொடுத்தால் அது பிழையாகாது.

**கௌரவ உறுப்பினர் என் கோவிந்த சாமி அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, SLIATE நிறுவனத்தைப் பற்றிய கடிதத்தில் சாராம்சத்தைப் பார்கின்ற போது அதில் இடப் பிரச்சினை என்பது காணவில்லை. சபைக்கு செலுத்த வேண்டிய நிலுவைப்பணம் சம்பந்தமாகவே உள்ளது. ஆகவே முதலில் எமது சபை நஸ்டமடையக்கூடாது. காரணம் சபையின் நோக்கம் நிதி ஈட்டுவது, அபிவிருத்தி செய்வது. எமது முழுநோக்கம் இந்த சபைக்கு நிதி வந்து சேர வேண்டும். இதனை மீறி நாங்கள் போவதென்பது சாலப் பொருத்தமாக இருக்காது. எனவே முதல்கண் எங்களது சபைக்குக் கிடைக்க வேண்டிய நிதியைப் பெற்றுக் கொள்ள முயற்சி எடுக்க வேண்டும். கல்வி நடவடிக்கை என்ற காரணத்தினால் முன்னுரிமை வழங்கி அதன் பின் இடத்தைத் தீர்மானிக்கலாம். என்பதுதான் கடிதத்திற்குரிய சரியான பதிலாகும் என்பது எனக்கு தென்படுகின்றது என்பதனை தங்களுக்கு பணிவுடன் அறியத்தருகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எமது சபைக்குச் செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையுடன் கால நீடிப்புக் கேட்ட அந்தக் காலத்திற்குரிய கொடுப்பனவையும் சேர்த்து பெற்றெடுத்தால் சரியாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் அச்சி முஹம்மட் அவர்கள் கூறிய போது SLIATE நிறுவனம் உருவாகிய சரித்திரம் தெரியாமல் பேசுகின்றார் என்று நினைக்கின்றேன். அதனை இவ்விடத்தில் பேசுவதற்கு நேரம் போதாது. இருந்தாலும் இந்த விடயத்தைப் பொறுத்தவரையில் எனக்கு வழங்கப்பட்ட தகவல் என்னவென்றால் SLIATE புதுக்கட்டத்தை கட்டுகின்ற கட்டட ஒப்பந்தக் காரர்கள் தங்குவதற்காகத்தான் எங்களது விளையாட்டுக் கட்டடத்தொகுதியை வாடகைக்கு வழங்கியிருக்கின்றோம் என்ற தகவல்தான் எனக்குக் கிடைத்தது.

நாங்கள் முடிவெடுத்ததன் பின்னர்தான் அங்கிருக்கின்ற மாணவர்களும், அதிகாரிகளும் எங்களை அனுகி உண்மையான நிலையை எங்களுக்கு விளங்கப்படுத்துகின்றார்கள். ஆகவே, இதில் 02 விடயங்கள் உள்ளது.

SLIATE நிறுவனமும் ஓர் அரசாங்க நிறுவனம். பிரதேச சபையும் ஓர் அரசாங்க நிறுவனம். ஓர் அரசாங்க நிறுவனத்தில் இருந்து இன்னோர் அரசாங்க நிறுவனத்திற்கு வர வேண்டிய பணத்தை நாங்கள் எப்படியும் பெற்றுக் கொள்ளலாம் ஆனால் தற்போது நாட்டில் எந்தத் திணைக்களத்திலும் எந்தவிதமான வேலைகளும் கடந்த ஒக்டோபர் 26 ஆம் திகதியில் இருந்து நடைபெற வில்லை. அமைச்சர்கள் யார் என்று தெரியாத நிலை. ஜனவரி 01ம் திகதியிலிருந்து அரசாங்க உத்தியோகத்தர்களது சம்பளம் வளங்குவதற்குக்கூட ஒரு Bord and Account இந்த மாதம் பாராளுமன்ற அமர்வில் சமர்ப்பிக்கின்றார்கள். 02 மாதத்திற்கு முழுமையான வரவு செலவுத்திட்டத்தை ஜனவரியில்தான் தயாரிக்கின்றனர். அதன் பிறகுதான் எந்த அரசாங்க நிறுவனமாக இருந்தாலும் 2019 ம் ஆண்டிற்குரிய செலவீனங்களை செலவு செய்யலாம்.

ஆகவே, ஜனவரிக்கு முதல் பணத்தைத் தாருங்கள் என்று கேட்டால் அவர்களால் அதனைத் தரவே முடியாது. நடைமுறையில் இல்லாத ஒரு காலக்கெடு. எனவே நாங்கள் இவ்வளவு காலமும் பொறுத்தது போல் அவர்கள் கேட்டதற்கினங்க மார்ச் 23 ஆம் திகதி வரை அவர்களுக்குக் காலக் கெடுவைக் கொடுப்போம். அவர்களிடம் முழுப்பணத்தையும் பெற்றுக் கொள்வதற்கு சட்டரீதியான நடவடிக்கை எடுக்குமாறும், மாணவர்களது கல்விக்கு எந்த விதமான இடைஞ்சலும் இல்லாமல் அவர்கள் கல்வியைத் தொடர்வதற்கு மார்ச் மாதம் வரையில் நாங்கள் அவர்களுக்கு அனுமதியைக் கொடுக்கலாம் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம் முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எனது முதலாவது கேள்வி SLIATE நிறுவணத்தில் இருக்கின்ற மாணவர்களா விளையாட்டுக் கட்டடத் தொகுதியில் கல்வி கற்கின்றனர்.? அல்லது கட்டட ஒப்பந்தக் காரர்களா அதனை பயன்படுத்துகின்றார்கள்?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
SLIATE என்ற விடயம் என்றவுடன் முன்னால் தவிசாளர், இன்றய தவிசாளர் இதற்கு எதிர்ப்பு என்ற கோணத்தில்தான் பார்கின்றனர். ஆனால் என்னுடைய நடவடிக்கைகள் அனைத்தும் நான் எந்த நிறுவனத்திற்கு பொறுப்பாக இருக்கின்றேனோ அந்த நிறுவனத்தைப் பாதுகாப்பது எனது கடமை. அதில் அரசியல் விளையாட முடியாது. நான் இவ்வளவு முயற்சியும் செய்ததனால்தான் இந்தளவுக்காவது வந்துள்ளது. எனக்காக அல்ல இந்த சபைக்காக காரணம் இது அரச நிறுவனம் அரசாங்கம். நாட்டில் குழப்பம் வந்தது 02 மாதம்தான். இவை மார்ச் மாதம் நீடித்துக் கொடுத்தது. அன்றில் இருந்து செயலாளருக்குத் தெரியும். நீங்கள் கூட்டத்தின் பின்னர் அவரிடம் கேட்கலாம் எத்தனையோ முயற்சிகள் எடுத்துள்ளோம். இதனை ஏற்றுக் கொள்கின்றோம் என்ற எழுத்து மூலமான அறிவித்தல்களும் இல்லை.

ஒரு நிறுவனம் இன்னொரு நிறுவனத்தினால் விரும்பியவாறு உபயோகிக்க முடியாது. இலாபம் நஸ்டம் பற்றிப் பிரச்சினை இல்லை. கல்விக்காக நமக்கு வருகின்ற வருமானத்தை விட்டுக் கொடுப்பதில் பிரச்சினையில்லை. ஆனால் சபைக்கென்று ஒரு கௌரவம் உள்ளது. அதனை மதிக்கப்பட வேண்டும். சபை மதிக்கப்பட வேண்டும். அரசியல்வாதிகள் நினைத்தமாரி சபையின் வளங்களை உபயோகிக்க முடியாது. நான் ஒரு காலமும் இதற்கு எதிர்ப்பில்லை. ஆனால் அந்த நிறுவனத்திற்கு பொறுப்பானவர் அவர்களின் கடமையை ஒழுங்காக செய்ய வேண்டும். இது இவர்களது பொடுபோக்கினால்தான் நடந்துள்ளது இதனை கொழும்புக்கு கொண்டு வந்து செய்திருந்தால் முடிந்திருக்கும் என்று அந்த நிறுவனத்தின் DDG என்னிடம் கூறினார்.

இந்த ஊரில் நடைபெறுகின்ற எந்த நடவடிக்கைகளுக்கும் எமது சபை ஒத்துழைப்பு வழங்கியுள்ளது. ஒன்றுக்கும் எதிர்த்ததில்லை. நமது வளங்களை 100 வீதம் கொடுக்கின்றோம். ஆனால் இந்த சபையில் சேவை செய்யும் ஊழியர்களைக் காப்பாற்ற வேண்டியது நமது பொறுப்பு.

நிர்வாகப் பொறுப்பு செயலாளருடையது. கணக்காய்வு உத்தியோகத்தர் நீங்கள் இதற்காக என்ன நடவடிக்கை எடுத்துள்ளீர்கள் என்று அவரிடம்தான் கேட்பார். அதற்காகத்தான் இதனை சபைக்குக் கொண்டு வந்தது. சபை இவ்வாறான தீர்மானம் எடுத்துள்ளது. இது நிர்வாக முடிவல்ல. இது சபையின் தீர்மானம் என்று அவர் பதில் கூற முடியும்.

விளையாட்டுக் கட்டடத் தொகுதியில் உள்ள அந்த மண்டபம் அத்தியவசியமான ஒன்று. அது இல்லாததனால்தான் Badminton Curt பாவிக்கப்பட்டு வந்தது. அதற்கும் ஒரு பிரச்சினை வந்து அதுவும் தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. இந்த மண்டபம் கொடுக்கப்பட்டது வகுப்புக்கள் நடாத்துவதற்குத்தான். சனி, ஞயிற்றுக் கிழமைகளில் முழு நேர வகுப்புக்கள் நடைபெறுகின்றது. அதனை நடாத்துவதனால் சபையின் நடவடிக்கைகளில் சிக்கல்கள் வருகின்து. அதனையும் பொறுத்துக் கொண்டு போனாலும். அதனை அவ்வாறு விட்டால் கணக்காய்வுக்குட்படுத்தப்பட்டால் என்ன பதில் கூறுவது. தற்போது அவை ஒழுங்குபடுத்தப்பட்டு இந்தக் கடிதமும் வந்துள்ளது. எனவே நமது சபை முடிவினை நான் அறிவிக்கின்றேன். கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியது போல் சில வேளை 03 மாதத்திற்குரிய பணத்தை ஜனவரியில் எடுக்க முடியாமல் போகலாம். ஆனால் இந்த வருடத்திற்குரிய பணம் உள்ளதாகவும் ஒப்பந்தத்திற்குரிய பிரச்சினைகளை முடிக்க வேண்டும் என்றும் என்னிடம் கூறினார்கள். அவைகள் முடிந்து அவர்களிடம் போய்விட்டது. அந்தப்பணம் வர வேண்டும். மற்றயதை 03 மாதத்திற்குள் கட்ட வேண்டும் என்று சபைத் தீர்மானமாக எடுத்து அறிவிக்கின்றேன். இது சபை முடிவாக வரவேண்டுமே தவிர அவர் இதைக்கூறினார் இவர் இதைக் கூறினார் என்று வெளியில் சபையின் அமர்வுகளில் நடப்பதை கூற வேண்டாம் அதில் மிகவும் கவனமாக இருப்பேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம் முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, உங்களுடைய கருத்துப்படி அங்கு மாணவர்களின் வகுப்புத்தான் நடைபெறுகின்றது. கட்டட ஒப்பந்தக்காரர்கள் இல்லை. அப்படியாக இருந்தால் நீங்கள் சபைக்குக் கூறியது போன்று அவர்களது கொடுப்பனவுகள் தாமதமாக்கப்பட்டாலும் கூட தற்போது அவர்களது உடன்பாடுகள் சரியாக வந்துள்ளது. SLIATE நிறுவனம் புதிய கட்டடத்தில் இயங்க ஆரம்பிக்கும் வரையும் எமது விளையாட்டுக் கட்டடத்தொகுதியில் இயங்குவதற்கு இன்னும் கால நீடிப்பு வழங்க வேண்டும் என்பது எனது அபிப்பிராயம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பெப்ரவரியில் அக்கட்ட வேலை முடிவடைகின்றது அந்த மாதத்தில் கொந்தராத்துக் காரர்கள் பாரம் கொடுப்பதாக உள்ளது. அதில் தற்போதும் வகுப்புக்கள் நடாத்தலாம். ஆனால் மாடியைப் பூரணப்படுத்தாமல் கொடுப்பதற்கு அவர்கள் விரும்பவில்லை. அதனால் ஒரு பாதுகாப்பாக மார்ச் வரையும் கொடுக்கின்றோம்.

ஒவ்வொருவரது பேச்சிலும் விளங்குவது என்னவென்றால் நீங்கள் இதில் நிர்வாகப் பக்கத்தைப் பாக்கின்றீர்கள் இல்லை. நீங்கள் கூறுவது அதனைப் பார்க்க வேண்டாம் மாணவர்களுக்காக இதனை செய்யுங்கள் என்கின்றீர்கள். ஆனால் அது நம்மளைப் பாதிக்காது இங்குள்ள ஊழியர்களைப் பாதிக்கும். அவர்களைப் பாதுகாகக் வேண்டியது எனது கடமை.

**தீர்மானம் 03**
SLIATE நிறுவனத்தினர் டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிலுவைப்பனங்கள் செலுத்தியதும் மார்ச் 23 ஆம் திகதி வரை அவர்களுக்கு நீடிப்புக் கொடுப்பதற்கும், தவறும் பட்சத்தில் சட்டநடவடிக்கை மேற்கொள்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | ஏ. அச்சி முஹம்மட் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
CTB Work Shop இதில் அந்தப் பகுதி மக்களின் விருப்பங்களையும் பூர்தி செய்பவர்களாக வர வேண்டும். ஆலையடிச் சந்தை சரித்திரம் உள்ள ஓர் இடம். இன்று நாம் செய்கின்ற வேலைகளினால் அவ்விடம் புற்றுயிர் பெற்றுள்ளது. அதற்குத் ததைடயாக CTB Work Shop வருகின்றது. அதற்கு இடத்தைப் பெற்றுக் கொடுப்பது சபைக்குரியதல்ல CTB இற்குரியது.

CTB Work Shop சம்மாந்துறையில் இருக்க வேண்டும் என்று நானும் விரும்புகின்றேன். ஆனால் அதனை நமது ஊரில் இருக்க வைப்பதற்கு CTB தான் முடிவெடுக்க வேண்டும். அது ஒரு நிறுவனம் அதற்கு இடம் கிடைக்க வில்லை என்று CTB Work Shop 06 வருடமாக சபைக்குத் திருப்பித் தராமல் இழுபறியில் போகின்றது. இதனை அவ்வாறே விட வேண்டும் என்று சபை முடிவெடுத்தால் எனக்கு ஒரு பிரச்சினையும் இல்லை. ஆனால் இதனை அரசியலுக்கு அப்பால் சபை நடவடிக்கைகளுக்கு இடைஞ்சலாக உள்ளது. இன்று நாம் அதனை பாரம் எடுத்து மக்களிடம் கையளிக்கக்கூடிய நிலை இல்லை. சென்ற சபை அமர்வில் கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியது நாம் அவர்களுக்கு மாற்று இடம் எடுத்துக் கொடுக்க வேண்டும் என்றார். மாற்று இடம் உள்ளது. ஆனால் அதற்குரிய வளம் இல்லை. அந்த வளத்தை CTB கொடுக்காது. அப்படி இல்லாவிட்டால் நாம் கௌரவ அமைச்சர்களிடம் போசி அதற்குரிய பணத்தைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். ஆனால் அதற்காக சம்மாந்துறையின் வளங்களை நாம் மக்களுக்கு பிரயோசனப்படுத்தாமல் இருப்பது என்னைப் பொறுத்த வரையில் அது நியாயமில்லை.

**கௌரவ உறுப்பினர் ஏ. யூசுப் லெவ்வை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, CTB Work Shop சம்பந்தமாகவும் நாம் இதற்கு முன் பேசிய SLIATE கல்வி நிறுவனம் இரண்டும் ஒரே விதமாக இருக்கின்ற படியினால் இவைகள் நமது ஊருக்கும் ஊர் மக்களுக்கும் பிரயோசனம் அளிக்கக்கூடிய நடவடிக்கைகளைத்தான் செய்து கொண்டிருக்கின்றது. அதன் அடிப்படையில் இந்த இரண்டு நிறுவனங்களையும் கொண்டு வந்தவர்களுக்கு இந்த ஊர் நன்றி தெரிவிக்க வேண்டும்.

இந்த ஊரின் விளையாட்டுக் கட்டடத்தொகுதி உருவாக்கப்பட்டது மனிதன் சுகாரார ரீதியாக பூரணமாக இருப்பதென்றால் விளையாட்டு அவசியம். அதற்காக கம்ரெலிய திட்டத்தில் கூட விளையாட்டுக்கென்று நிதிகளை ஒதுக்குகின்றது. இவ்வாறு இருக்கும் போது நாங்கள் அவ்வாறான கட்டடத்தொகுதியை கடந்த அரசாங்ககங்களினூடாக இந்த ஊருக்குக்குக் கொண்டு வந்ததில் பிரயோசனமான இலக்குகளை அடைய வில்லை. என்பது தான் எனது கருத்தாக இருக்கின்றது.

இருந்தாலும் இந்த சபையின் வருமானத்தை என்னி கல்வி நிறுவனம் வெளியில் செல்லக்கூடாது என்பதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடந்து கொண்டிருக்கின்றது. இவ்வாறு ஒவ்வொரு நிறுவனங்களும் உரிய இடங்கள் இல்லாமல் கஸ்ட்டப்பட்டு இந்த ஊரில் இந்த நிறுவனங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. எனவே தற்போது நாம் சம்மாந்துறை பிரதேச சபைக்குள் இருக்கின்ற அரச நிலங்களை இணங்கண்டு அதற்கான கட்டடங்களை அமைப்பதற்கு இந்த ஊரின் மக்கள் பிரதிநிதிகள் முன்வர வேண்டும்.

இதில் முக்கிய கவனம் செலுத்த வேண்டும் என்று சபையின் கோரிக்கையாக நான் கூறிக் கொள்ள விரும்புகின்றேன். இது சம்பந்தமான ஆக்க பூர்வமான எழுத்துருவமான கடிதத்தை இந்த சபை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும், பிரதேச செயலாளருக்கும் அனுப்புவது சாலச் சறந்ததாக இருக்கும் என நான் கருதுகின்றேன். விளையாட்டுக் கட்டடத் தொகுதியில் சபையினூடாக அல்லது கட்சிகளினூடாக சிறந்த விளையாட்டு உபகரணங்களை பெற்றுக் கொடுத்து நடைமுறைப்படுத்துவது மக்களுக்கு ஒரு பூரணமான ஒத்துழைப்பாக இருக்கும் என்பது எனது கருத்தாகும்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, CTB Work Shop தொடர்பாக கடந்த சபை அமர்விலும் நாம் பேசியிருந்தோம். அதில் எடுக்கப்பட்ட கருத்துக்களின் படி அவர்களுக்குரிய இடத்தை அடையாளப்படுத்திக் கொடுப்பதற்கு வருகின்ற DCC கூட்டத்திலே காணியைப் பெற்று அதனை அடையாளப்படுத்தியதன் பின்னர் குறிப்பிட்ட காலம் அதாவது 06 மாத காலம் அவகாசம் கொடுத்து அவர்களுக்கு கட்டடம் கட்டுவதற்குரிய நிதியைத் தேடுவது சபையின் பொறுப்பல்ல எங்களுக்கு எங்களது சபையின் கட்டடம் திரும்பத் தேவை அதனால் வருமானத்தை ஈட்டலாம். அதே நேரத்தில் அங்கிருக்கின்றவர்களையும் நாங்கள் நடு வீதியில் விடாமல் குறிப்பிட்ட கால அவகாசம் வழங்குவதற்கு முதல் அவர்களுக்குரிய இடத்தை குறிப்பிட்டுச் செல்ல வேண்டும்.

கடந்த சபை அமர்வில் நாங்கள் குறிப்பிட்டிருந்தோம். பாம் வட்டையில் 05 ஏக்கர் காணி அவர்களுக்காக பெற்றுத்தருமாறு சபையின் அனுமதியினூடாக நாங்கள் கோரிக்கையை முன்வைத்து அந்த இடங்கள் கிடைத்ததன் பின் மேற்கூறிய விடயங்களைக் கூறலாம். அதன் பின்னரும் எழும்பாவிட்டால் நாங்கள் மாற்று நடவடிக்கை பற்றிச் சிந்திக்கலாம். இப்போது நாங்கள் அவர்களை இங்கிருந்து எழும்புங்கள் என்று கூறினால் அவர்கள் எப்போது இங்கிருந்து எழும்புகின்றார்கள் என்று பார்த்துக் கொண்டிருக்கின்றார்கள். இந்த வளத்தை சம்மாந்துறையில் இருந்து அம்பாரைக்கு எடுத்துச் செல்வதற்காக. முன்னால் மறைந்த கௌரவ பிரதி அமைச்சர் ULM.முகைடீன் அவர்களின் பாரிய முயற்சியினால் கொண்டு வரப்பட்ட CTB Work Shop இனை மிக இலகுவாக நினைத்தது போல் ஊரில் இருந்து வெளியில் செல்வதற்கு நாங்கள அனுமதிக்க முடியாது.

எதிர்வருகின்ற அமைச்சரவையிலே வருகின்ற தகவல்களின்படி கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பௌசி அவர்கள் மீண்டும் போக்குவரத்து அமைச்சராக வருவதற்குரிய சாத்தியக் கூறுகள் இருக்கின்ற படியினால், நாங்கள் அவர்களுக்கு முதலில் கூறியது போல் இடத்தைப் பெற்றுக் கொடுத்து இதனைத் தந்த பாராளுமன்ற உறுப்பினர் அமைச்சராக வந்துள்ளார். நீங்கள் அவர்களிடம் சென்று இயலுமாயின் அதற்குரிய நிதியைப் பெற்றுக் கொண்டு வந்து கட்டடத்தைக் கட்டி கொள்ளுங்கள். எங்களது சபைக்குரிய கட்டடத்தை திருப்பித் தாருங்கள் அதனால் நாங்கள் மாற்றுத் தேவைகளுக்காக பயன்படுத்தி சபைக்கு வருமானத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அதற்கிடையில் நாங்கள் அவர்களை அங்கிருந்து எழும்பிச் செல்லக் கூறுவது மனிதாபிமானரீதியுமல்ல, எங்களுடைய பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நாங்கள் செய்கின்ற அகௌரவமாக இருக்கும் என்று கூறிக் கொள்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த இடத்தில் எங்களது CTB Work Shop சம்பந்தமான எல்லோரது கருத்தும் சபைக்குரிய இடத்தை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு வேறு இடத்தை தயார் செய்து கொடுக்க வேண்டும் என்று. இதனை யாராவது பொறுப்பெடுத்துக் கொண்டு இதனை மாற்றுவதற்கான முயற்சியைச் செய்ய வேண்டும். ஏனெனில் CTB Work Shop யைப் பொறுத்தவரையில் அங்கு இருக்கும் ஊழியர்கள் அவர்களது சம்பளத்தைப் பெறுவதற்கே சிரமப்படுகின்ற அமைச்சு சபைதான் CTB.

எனவே, அவர்களால் ஒரு அங்குலம் கூட அகற்ற முடியாது. எங்களுக்கு அதற்கான ஆலோசனைகளையும், கருத்துக்களையும் கூறுவார்கள். எனவே இதனை ஊர் அரசியல் தலைமைத்துவங்கள் தான் எந்த வகையில் இதனை இடம் மாற்ற வேண்டும் என்ற திட்டங்களைச் செய்ய வேண்டும். அதற்காக நமது சபையின் பங்கு என்ன என்பதை கவனத்தில் எடுத்து அதற்கான வேலைகளைச் செய்வது சிறப்பானது என்று நான் கருதுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எம். முஸ்தபா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற மாதக் கூட்டத்திலும் நான் கூறினேன் CTB Work Shop இற்கான காணிகள் ஒதுக்கப்படுகின்ற சந்தப்பத்தில் ஏற்கனவே சம்மாந்துறை நீதவான் நீதி மன்றக் கட்டடத்திற்கு அருகில் வழங்கப்படுகின்ற காணியை சம்மாந்துறை நீதவான் நீதி மன்றத்திற்கு

பெற்றுக் கொடுப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கூறி சபையின் முன்னெடுப்பாக வேண்டியிருந்தேன்.

இன்று எங்களது கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறிய விடயத்தின் தொடர்சியாக CTB Work Shop நிலத்தை வருகின்ற DCC கூட்டத்தில் அந்தக் காணியை பாம் வட்டையில் எடுத்துக் கொடுக்கின்ற மசோதாவை முன்வைக்கின்ற போது சம்மாந்துறை நீதவான் நீதி மன்றத்திற்கு அண்மையில் அமைந்திருக்கின்ற பிரதேச சபையின் கட்டுப்பாட்டில் தற்போது இருக்கின்ற அந்தக் காணியை சம்மாந்துறை நீதவான் நீதி மன்றத்திற்குரிய கட்டட வேலைகளை மேற்கொள்வதற்கு நீதி மன்றத்திற்கே பெற்றுக் கொடுப்பதற்குமான நடவடிக்கையையும் மேற்கொள்ளலாம் என்று கௌரவ சபைக்கு ஒரு மசோதாவை முன்வைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம். றியாஸ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, CTB Work Shop இருக்கின்ற பிரதேச சபை இடத்தை 2009 ஆம் ஆண்டு 12.18 ஆம் திகதியும் சபை மூலமான ஓர் அறிக்கை விடுத்துள்ளார்கள். அதன் பின் பல கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. இது காலவரைக்கும் எடுக்காத எந்த நடவடிக்கையையும் இனிமேல் எடுப்பார்களா? என்பது கேள்விக்குரிய விடயம். எனவே, தயவு செய்து வீனாக காலங்களை அலப்போக்காமல் இதற்குரிய நடவடிக்கை எடுத்து உத்தரவாதப்படுத்தப்பட்ட எழுத்து மூலமான ஏதாவது ஒன்றைப் பெற்று உரிய நடவடிக்கை எடுத்து மீளவும் பழைய மார்கட்டை புனர் நிர்மானம் செய்து மக்களிடம் கையளிக்கும்படி வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, CTB Work Shop கிழக்கு மாகாணத்திலேயே இது ஒன்றுதான் இருக்கின்றது. இது மறைந்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினல் ULM. முகைடீன் அவர்கள் அந்த நேரத்தில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பௌசி அவர்களுக்கும் இடையில் இருந்த நெருக்கத்தினால்தான் இது வந்தது. அந்த இடத்தை DCC யில் எடுத்துக் கொடுத்தாலும் மேற்கொண்டு கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள் கூறியது போல் கட்டடத்திற்கான ஏற்பாட்டையும் பெற்றுக் கொடுக்க முயற்சி எடுக்க வேண்டும். நாம் நமது ஊருக்குக் கிடைத்த வளத்திற்கு இடத்தையும் பெற்றுக் கொடுத்து அதற்கான கட்டடத்திற்கான ஒழுங்கையும் வளப்படுத்திக் கொடுக்க வேண்டும். நமது சபையினால்தான் செய்யப்பட்டது என்ற பெருமையும் எடுத்துக் கொள்ளலாம். எனவே சம்மாந்துறையின் இந்த கௌரவமான சபை நல்ல முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டு எனது கருத்தைத் தெரிவிக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இந்த விடயங்களில் நான் அவதானிப்பது கௌரவ உப தவிசாளரின் கருத்துப்படிம் எனது கூற்றின்படியும் நாம் சில விடயங்களின் யதார்த்தத்தை உணராமல் உணர்சி பூர்வமாக யோசிக்கின்றோம். நான் ஒன்றுக்கும் எதிர்த்தவன் அல்ல. ஆனால் யதார்த்தத்தை உணர வேண்டும். CTB சம்பளம் கொடுப்பதற்கே பிரச்சினை உள்ள ஒரு நிறுவனம். இந்த CTB Work Shop அவ்விடத்தில் வந்ததற்குக் காரணம் அந்த நேரத்தில் ஒரு யுத்த சூழ்நிலையினால் ஒரு பாதுகாப்பான இடம் வேண்டும் என்று அந்த நேரம் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் ULM. முகைடீன் அவர்களும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் பௌசி அவர்களும் மிகவும் நெருங்கிய நன்பர்கள். அதன் மூலமாக எமது ஊருக்கு கொண்டு வரப்பட்டு அவ்விடத்தில் சந்தை இயங்கவில்லை அதனால் அவ்விடம் பொருத்தமாக இருந்தது.

நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். இன்று எந்த டிப்போவிடம் கேட்டாலும் CTB Work Shop எந்த ஒரு பிரயோசனமும் இல்லை என்றுதான் கூறுவார்கள். அதுதான் உண்மை. அவர்களது வேலைத்தரம் சீராக இல்லை. அரசியல் காரணங்களுக்காகத்தான் இதனை அவ்விடத்தில் இருந்து அகற்றக்கூடாது என்று கூறுகின்றீர்கள். அதில் பிரச்சினை இல்லை. ஆனால் யதார்த்த பூர்வமாக சிந்தித்து இதனை என்ன செய்யலாம்? அதாவது இந்த சந்தையைப் பொறுத்தவரை 02 நடவடிக்கை எடுக்கலாம். ஒன்று இவர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கை எடுத்து அவர்களை அனுப்பலாம். 02

வது நாம் 06 வருடமாக செய்து வரும் ஒவ்வொருவரிடமும் சொல்லி வந்தும் ஒன்றும் நடக்க வில்லை. இனிமேல் இந்த சபையின் தவிசாளர் என்ற ரீதியிலும் உங்களின் பிரதிநிதி என்ற ரீதியிலும் உங்களிடம் நான் அனுமதி கேட்கின்றேன். நாம் CTB Work Shop பற்றி விரிவாக 02 பாராளுமன்ற உறுப்பினர்களிடமும் அறிவித்து அதற்கான காணியைப் பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சி எடுப்போம்.

நான் ஏற்கனவே பிரதேச செயலாளரிடம் கூறியுள்ளேன். அவ்விடத்தில் CTB Work Shop பொருத்தமில்லை. அதில் நீதிமன்றம் இருக்க வேண்டும் என்றால் அவ்விடத்தில் உள்ள நிலத்தைக் கொடுக்க வேண்டும். DCC வரும்வரை இருக்காமல் இப்போதே ஒரு முன்மொழிவினை எழுதிக் கொடுப்போம். அத்தோடு 06 மாத காலத்திற்குள் இவைகள் பூர்த்தி செய்யாவிட்டால் எங்களுக்கு வேறு வழியில்லை அதனை மீளப் பெற வேண்டும் என்று கூறி கால தாமதம் வழங்கலாம். இல்லாவிட்டால் நாம் மக்களுக்கு செய்கின்ற துரோகமாகிவிடும்.

பிட் கழிவுகளுக்கு கதிர்காமப் பிரதேச சபையில் ஒரு Plant செய்துள்ளார்கள் அதனை நானும் உள்ளூராட்சி உதவியாளரும் சென்று பார்வையிட்டோம். சிறிய ஏரியாவிற்குள் ஒரு இயங்திரமும் இல்லாமல் ஒரு வக்கிற்குள் கொண்டு வந்து திறந்து போடுகின்றனர். அதனைக் கொட்டும் நேரம் மாத்திரம்தான் சிறிய நாற்றம் வரும் அதிலிருந்து கழிவுகள் கீழால் செல்கின்றது. நீர் மற்ற வக்கிற்குச் செல்கின்றது. பின்னர் 03 வக்குகள் உள்ளது. அதற்குள் தும்பு கட்டி தொங்கவிடப்பட்டுள்ளது. அதனால் போய் வெளியில் வரும் நீர் ஒரு மனமும் இல்லை. சிறந்த நீராகக் காணப்படுகின்றது. அவர்கள் Compost yard க்குள்தான் வைத்துள்ளனர். அவர்கள் கூறுகின்றனர் அதனை இறக்கும் போதுதான் இந்த நாற்றம் வரும். அதன் பின் ஒரு பிரச்சினையும் இல்லை. நாற்றமும் இல்லை.

நான் அந்தப் திட்டத்தினைக் கொடுத்துள்ளேன். சிலவேளை நமது Compost yard க்குள் 02 மில்லியனுக்குள் அதனைச் செயலாம். அவ்வாறு செய்தால் அதனால் வருகின்ற கழிவுக்கு Composting க்கு அதன் தரத்தை உயர்த்தும். இன்று நமது ஊருக்குள் 02, 03 பேச்சுக்குள் வீடுகளை கட்டியிருப்பவர்கள் மிகவும் கஸ்ட்டப்படுகின்றார்கள். அதற்கு நாம் இதனை செய்தால் வருமானமும் கிடைக்கலாம். அதற்குக் காணி கேட்டுள்ளேன். எனது என்னம் நமது Compost yard க்குள் செய்வதுதான். இன்று அரசியல் எவ்வாறு அமையப் போகின்றது என்பது நமக்குத் தெரியாது எது என்ன நடந்தாலும் நாம் ஒற்றுமையாக செயற்ப வேண்டும். நமது வளங்கள் என்ற நோக்கத்தில் அவைகளைச் செய்ய வேண்டும்.

எதிர்வருகின்ற மாதம் ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள உறுப்பினர்களுடன், EDO, புத்திஜீவிகள் அனைவரையும் எடுத்து நாம் ஒரு Village Development Plan எடுத்து அதனை அனைவருக்கும் நமது திட்டத்தின் படி பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் அனைவருக்கும் கொடுத்தால் அவர்களுக்கும் இலகுவாக இருக்கும். அதில் இருந்து அவர்கள் தெரிவு செய்யலாம் அவ்வாறு செய்தால் நமக்கும் ஒரு திட்டத்ததுடன் செயற்படுத்துகின்றதாக இருக்கலாம்.

**Road Inventory** தொடர்பாக பல தடவைகள் நான் மன்றாடியும் இன்னும் அதிகமானவர்கள் பூர்தி செய்ய வில்லை. ஆனால் இன்று நான் சந்தோசப்படுகின்றேன். கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களும் கௌரவ உறுப்பினர் கோவிந்த சாமி அவர்களும் தந்துள்ளார்கள். இதில் 06 ம் வட்டாரத்தில் உள்வாங்கப்பட்டவர்கள். வட்டாரத்தில் இதற்குப் பொருத்தமானவர்கள் றாசிக் ஆசிரியர், முஸ்தபா ஆசிரியர், GS மார் அனைவரையும் உள்வாங்கி 45 பாதைகளுக்கு பெயர்கள் வந்துள்ளது. தயவு செய்து தராத உறுப்பினர்கள் அவசரமாகத் தந்தால் நாம் அதனை சரியாக செய்யலாம். உங்களுக்கு அதனை செயற்படுத்துவதில் பிரச்சினைகள் இருந்தால் அதனைக் கூறலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நீங்கள் குறிப்பிட்ட கழிவு அகற்றல் தொடர்பான விடயத்தில் நான் கூற வேண்டும். என்னவென்றால், டிசம்பர் மாதத்திற்குள் இரானுவத்தினால் பிடிக்கப்பட்ட இடத்தில் உள்ளவர்களை எழும்பச்சொல்லியிருக்கின்றார்கள். எங்களது சங்கத்தில் 25 ஏக்கர் காணி தடயட்டகிருளைக்கு வாகனத் தரிப்பிடமாக வந்த காணியில் நிரந்தரமாக இருக்கின்றார்கள். அதில் உள்ள இரானுவம் வெளியாகினால் அதில் அத்திட்டத்தை செயற்படுத்துவதற்கு பிரதேச சபைக்கு எத்தனை ஏக்கர் தேவை என்றாலும் தருவதற்கு ஆயத்தமாக இருக்கின்றோம். அதற்கான பேமிட்டும் உள்ளது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதில் உள்ள பிரச்சினை என்னவென்றால் உங்களுக்குத் தெரியும் அதில் நான் மிகவும் ஈடுபாட்டுடன் செயற்பட்டேன். 1971ஆம் ஆண்டு நில அளவைப்படி வளத்தாப்பிட்டிக்கு மேல் ஒரு சின்னக் குளம் இருந்தது. அதற்கு மேலால் தான் சம்மாந்துறையின் எல்லை. அப்படியானால் இந்த சர்ச்சைக்குரிய காணிககள் அனைத்தும் சம்மாந்துறை பிரதேசத்திற்குத்தான் வந்தது. அதன் பின் அம்பாரை நகர அபிவிருத்தி அதிகார சபை உருவாக்கப்பட்ட நேரம் எந்த ஒரு அறிவித்தலும் இல்லாமல் அதற்கு மேலால் சென்ற வீதி கீழால் வந்து வளத்தாப்பிட்டி ஓரத்தினால் வந்து புத்தங்கலைக்கு போய்விட்டது. அதனால் சம்மாந்துறை பிரதேச செயலகத்தினால் காலாகாலமாக பராமரிக்கப்பட்டு வந்த காணிகள் 540 ஏக்கர் காணிகள் அம்பாரை பிரதேச செயலகத்திற்குள் உள்வாங்கப்பட்டுள்ளது. ஆனால் எந்த ஒரு அறிவித்தலும் இல்லாமல் மாற்றப்பட்டுவிட்டது. அவ்வாறு இருந்தும் 1987 ஆம் ஆண்டில் இருந்து 1990 ஆம் ஆண்டு மட்டுமல்ல 2000 ஆம் ஆண்டிலும் நாம் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் பேமிட் வெளியாக்கியிருந்தோம்.

நமது மக்கள் DS இடம் செல்லவில்லை. DO மல்வத்தை. அதனால் சம்மாந்துறை மக்களின் காணியின் அருகில் மக்கள் குடியேற்றம் இடம்பெற்றது. இன்று கௌரவ உறுப்பினர் கூறுகின்ற காணி அதனுடன் இருக்கின்ற உறுதிகள் மக்களிடம் இருக்கின்றது. அவர்களால் எதுவும் செய்ய முடியாத ஒரு நிலை. உங்களது விடயத்தில் இங்கு பேமிட் வழங்கப்பட்டுள்ளது. ஆனால் அங்கு அவர்களது காணியாகத்தான் உள்ளது. அதுவும் திட்டமிட்டு செய்த விடயங்கள். இவை தொடர்பில் நிர்வாக ரீதியில் நமது மக்கள் மயப்படுத்தப்பட வில்லை.

சம்மாந்துறையின் வளங்கள் எவ்வாறு நமக்கு தெரியாமல் திட்டமிடப்பட்டு நம்மிடம் இருந்து போய்விட்டது. இன்று வளத்தாப்பிட்டி குளத்திற்கு பக்கத்தில் சம்மாந்துறைக்குச் சொந்தமில்லை. அனைத்துக் காணியும் அம்பாரை பிரதேச செயலகத்திற்கு சொந்தமானது. இந்தக் குடியேற்றங்களைக் கொண்டு வந்து மக்களுக்கு பல அச்சுறுத்தலை விடுக்கின்றனர். நீங்கள் கூறியவாறு அவ்விடத்தில் அவைகளைச் செய்வதற்கு அவர்கள் விடமாட்டார்கள்.

**கௌரவ உறுப்பினர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அண்மையில் Composting தயாரிக்கும் இயந்திரம் ஒன்றை புதிதாக கண்டு பிடித்துள்ளார்கள். அதனை நாம் பெற்று ஏதாவது இடத்தில் பொருத்தலாமா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கவசக்கி மிசின் நாம் கைகளால் செய்வதை மெசினால் செய்கின்றது. Composting மாத்திரம்தான் செய்கின்றது. அதற்குரிய வலு நமக்கில்லை நாம் மற்றவர்களின் குப்பைகளையும் எடுக்க வேண்டும். அந்த இயந்திரம் 100 மில்லியன் பெறுமதி வாய்ந்தது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, பாதைகளுக்கு பெயரிடுவது சம்பந்தமாக பேசவேண்டிய நிர்பந்தம் என்வென்றால் பிரதேச செயலகத்தில் பாதைக்கு ஒரு பெயரும். அதே பாதைக்கு பிரதேச சபையில் ஒரு பெயரும், மக்கள் மத்தியில் வேறு பெயருமாக, உதாரணமாக எனது வட்டாரத்தில் மல்கம்பிட்டியர் வீதி என்ற பிரச்சினை வந்த போது என்னிடம் பிரதேச செயலகத்தில் கேட்டார்கள் உங்களது தவிசாளர்தானே ஒப்பமிட்டுத் தந்துள்ளார் என்றார்கள். அது ஏற்கனவே போடுபட்டது

உங்களுக்குத் தெரியாதா? என்று கேட்டார்கள். எங்களது பிரதேச சபையில் அது தேண்பானையார் 1 ம் குறுக்கு வீதி, உங்களது பிரதேச செயலகத்தில் மல்கம்பிட்டியர் வீதி. எனவே இது போன்ற வித்தியாசமான பெயர்கள் வருவதற்கு முன்பு ஏனைய பிரதேச சபை உறுப்பினர்கள் அனைவரும் முயற்சி செய்து இதில் தீவிரமாக நடைமுறைக்குக் கொண்டு வர வேண்டும்.

அவர்கள் தாமதமானாலும் எங்களது பிரச்சினை முடிய வேண்டும். இவ்வாறுதான் கைத்தொழில் அமைச்சினால் கிடைக்கப்பெற்ற வாழ்வாதார முன்மொழிவு தாமதமானதன் காரணமாகத்தான் எங்களது பிரச்சினை முடியாமல் உள்ளது. அனைவரையும் உள்வாங்கி செய்கிறதனால் காலதாமதமாகின்றது. எங்களுக்கு எங்களது வட்டாரத்தின் பிரச்சினை தீர வேண்டும். எது முதல் வருகின்றதோ அதனை உட்சாகமாக முதல் செய்வதற்கு அனைவரும் முன்வர வேண்டும். இல்லாவிட்டால் நாம் இங்கு வந்திருப்பதில் பிரயோசனம் இல்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அவைகளை உள்வாங்கித்தான் நான் இவ்வளவு நேரமும் பேசியது என்னவென்றால், Road Inventory நமது பொறுப்பு; அதனை செய்து கொடுத்தால் நமது பிரச்சினைகள் தீரும். சபைக்கு வீதிகளின் பெயரை முன்மொழியலாமே தவிர நாம் தீர்மானிக்க முடியாது. அதனை அமைச்சர்கள் செய்ய வேண்டும். முன்மொழியும் அதிகாரம் சபைக்குத்தான் உள்ளது. அவசரப்படுத்தி முடிந்து விட்டால் அவை அமைச்சரிடம் சென்று கெசட் பன்னினால் அதன் பெயராக வரும். அவ்வாறு செய்யாமல் இருப்பதனால்தான் இந்த நடைமுறைச் சிக்கல் சட்டப்பிரச்சினையாக வருகின்றது.

**தீர்மானம் 04**
சென்ற மாதம் 01.11.2018 தொடக்கம் 30.11.2018 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்க சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அபிவிருத்தி வேலைகள் செய்யப்படுபவைகள் அனைத்தும் இந்த கிழமைக்குள் முடித்து பில் போடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுங்கள். இல்லாவிட்டால் 03 மாதம் காத்திருக்க வேண்டும். PSDG வேலைக்குரிய கொடுப்பனவை மாகாண சபையினால் எடுகக் முடியாமல் உள்ளது. தற்போது மாகாண சபை அங்கீகாரம் தருகின்றது. PSDG க்கு அவர்கள் நிதி தருவதனால் சபை நிதியில் கொடுத்துவிட்டு அதனை அவர்கள் மீண்டும் தருவார்கள். இது PSDG வேலைக்கு மட்டும். மற்றய அமைச்சு வேலைகள் நகர திட்டமிடல் வேலைகள் அனைத்தும் தயவு செய்து இந்தக் கிழமைக்குள் முடிக்க வேண்டும்.

**தீர்மானம் 05**
உள்ளுராட்சித் திணைக்களத்திலிருந்து இவ்வருடம் மேற்கொள்ளப்பட்ட இரு PSDG வேலைகளுக்குமான கொடுப்பனவினை சபை நிதியிலிருந்து வழங்குவதற்கும், உரிய நிதி கிடைத்தவுடன் அதனை மீள்நிரப்பவும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.அச்சி முஹம்மட் |

**தீர்மானம் 06**
எமது பிரதேச சபையின் 2019 ஆம் ஆண்டுக்குரிய மாதாந்தக் கூட்டத் தொடர் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டவாறு ஒவ்வொரு மாதத்திலும் 2வது செவ்வாய் கிழமையில் காலை 9.30 மணிக்கு நடாத்துவதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ். நளீம் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம். இன்பவதி |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
உங்களுக்குத் தெரியும் நமது ஊரில் வருமானம் அறவிடுவதற்கு ஜனாப் மீரா முகைடீன் எனும் ஒரு நபர் இருக்கின்றார். அவருக்கு சம்பளம் இல்லை Commission வழங்குகின்றோம். அதனை நாம் அதிகரிக்க வேண்டும். அதற்கு இன்னும் இருவரை எடுக்க வேண்டும். அதற்கு சம்பளம் இல்லை. Commission கொடுப்போம். அதற்கு நீங்கள் சிபார்சு செய்கிறவர்கள் இருந்தால் அவர் டிபோசிட் வைக்க வேண்டும். பின் அவர்கள் வீடு வீடாக சென்று எவ்வளவு வருமானத்தை சேகரிக்கின்றாறோ அதில் 12 வீதம் Commission வழங்கப்படும்.

**தீர்மானம் 07**
தற்போது சோலை வரி அறவீடு செய்வதற்கு (நடுக்கட்டு) வரி சேகரிப்பாளர் ஒருவரே பணியாற்றுகின்றார். மேலதிகமாக இன்னும் இருவரைப் பயன்படுத்த சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**தீர்மானம் 08**
இழுவைப் பெட்டி (RV - 6876 ) இற்கு இரு டயர்களை மாற்றம் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |

**தீர்மானம் 09**
கைத்தொழில் வர்த்தக அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலும், நகர திட்டமிடல், நீர் வழங்கள் வடிகாலமைப்பு அமைச்சின் நிதி ஒதுக்கீட்டிலும், உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதியினாலும் செய்யப்பட்டுள்ள கீழ்வரும் வேலைத்திட்டங்களை மேற்கொள்ள சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

**வேலைகளின் விபரங்கள்**

01. Concreting and Surfacing to Anver Ismail Mawtha near Road Kallarichal - 02
02. Const. of Boundary Wall at Thikappalli, Sammanthurai.
03. Chain Link Fence for Community Center at Malwaththai
04. Renovation of Drainage Extinction of Pipe Laying At Sennalgiramam – 02
05. Asphalt Road ad Dharussalam East Road

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எம். இன்பவதி |

**தீர்மானம் 10**

யானையால் சேதமாக்கப்பட்ட சேதனப் பசளை தயாரிக்கும் நிலைய சுற்று மதிலை புணரமைப்புச் செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | | |
|---|---|---|---|
| பிரேரித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : | கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, எங்களது வளத்தாப்பிட்டியில் சம்மாந்துறை வனஇலாகா அலுவலகம் ஒன்று பிள்ளையார் கோவிலுக்கு முன் உள்ள சனசமூக நிலயத்தில் தற்காலிகமாக இயங்க வழங்கினோம். அது இப்போது ஊர் மக்களுக்கும், அவர்களுக்கும் இடையில் அடிக்கடி முறுகல் நிலை உருவாகின்றது. இந்த சூழலில் அந்தக் காரியாலயத்தை எழுப்புவதற்கான நடவடிக்கை செய்து அதற்கான முடிவும் வந்துள்ளது. அதன் காரணமாக அவர்கள் அம்பாரைக்கு செல்லும் நோக்கில் உள்ளார்கள். அது சம்மாந்துறைக்குரிய காரியாலயம். அந்த சந்தர்ப்பத்தில் அதில் கடமையாற்றும் ஒருவர் கூறினார் சம்மாந்துறையில் ஒரு கட்டடத்தை தேடித்தாருங்கள் என்றார். எனவே இது சம்பந்தமாக பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொண்டு சம்மாந்துறைக்குள் இருக்கின்ற ஒரு பொதுக்கட்டடத்தில் அதனை நடாத்த ஏற்பாடு செய்து கொடுப்பது சிறந்தது என்று நான் நினைக்கின்றேன்.

மாட்டுப்பட்டி பிரச்சினை ஒரு பாரிய பிரச்சினையாக உள்ளது. வீரமுனைக்குச் செல்கின்ற முன் இடத்திலே மாட்டுக் கொட்டிலை வைத்துள்ளனர். அதனால் அவர்களுக்கு அசௌகரியமாக உள்ளது. வளத்தாப்பிட்டியிலும் அதே பிரச்சினை உள்ளது. இதற்கான இடத்தையும் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

வனவிலங்குக் காரியாலையம் ஏற்கனவே APC இல் இருந்தது. பிரச்சினை வளத்தாப்பிட்டியில் இருந்ததனால் அதனை அங்கு கொண்டு சென்றார்கள். மீண்டும் அதனை சம்மாந்துறைக்குள் கொண்டு வந்தாலும் அங்குதான் அது தேவைப்படும். அதற்கு மாற்றாக விவசாய விரிவாக்க நிலையத்திற்குச் சொந்தமான கட்டடம் ஒன்று நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு பின்னால் உள்ளது. அதனை நாம் சிபார்சு செய்யலாம். உண்மையில் அதற்குப் பொறுப்பு நாமல்ல. இது விடயமாக பிரதேச செயலகத்திற்கு அறிவிப்போம். ஊருக்கு கொண்டுவருவதில் பிரயோசனம் இல்லை. மல்வத்தை அல்லது சென்னல் கிராமத்தில் இருக்க வேண்டும்.

ஆலையடி பொதுச்சந்தை திருத்த வேலைகள் அனைத்தும் முடிந்து அந்தக் கடைகளை மக்களுக்குக் கொடுக்க வேண்டும் இதில் நமது அனுபவத்தின் படி அனைவருக்கும் ஒரே மாதிரியான கடைக்குக் கொடுத்தால் அது தொடர்ந்து இயங்காது. அதனால் கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் ஓர் ஆலோனையினை இனங்கண்டுள்ளார் இதில் மாற்றங்கள் செய்வதென்றால் நாம் செய்யலாம்.

- கடை இலக்கம் - 01 (பேஸ்ரி சொப்) காலை மாலை உணவு,
- கடை இலக்கம் - 02 கேஸ், அரிசி கடல், குளத்து காய்ந்த கருவாடுகள், இறைச்சிச் சம்பல், மாசிச்சம்பல் போன்றவை
- கடை இலக்கம் - 03 நாட்டுக் கிழங்கு வகைகள், மரக்கறிகள் - (காய்கறி, கீரை வகைகள்)
- கடை இலக்கம் - 04 மாட்டிறைச்சிக்கடை
- கடை இலக்கம் - 05 வழைப் பழம் மற்றும் இதர பழங்கள்
- கடை இலக்கம் - 06 மற்றும் 07 பலசரக்கு சில்லறைக் கடை
- கடை இலக்கம் - 08 ஆங்கில மரக்கறி அடங்கலான மரக்கறிக் கடை
- கடை இலக்கம் - 09 கோழி, காடை இறைச்சிக்கடை

இவ்வாறு வந்தால் அவ்விடத்தில் ஒருவர் சென்றால் சம்பூரணமாக அனைத்துப் பொருட்களையும் அவ்விடத்திலேயே பெற்றுக் கொள்ள முடியும். அதற்கென்றுதான் கேள்வி கூறல் செய்யப்படும்.

எனது விருப்பமாக 01ம் கடையில் ஒரு பாபர் சலூன் வரவேண்டும் என்றிருந்தது. காரணம் அந்த வீதியில் அக்கடை இல்லை. அதனை அந்தப் பிரதேச மக்கள்தான் தீர்மானிக்க வேண்டும். இதில் வேறு ஏதாவது மாற்றங்கள் இருக்குமானால் உங்களது கருத்துக்களை கூறலாம். அத்தோடு அதற்கு மின் இணைப்புக்களையும் செய்ய வேண்டும்.

**தீர்மானம் 11**

ஆலையடிச் சந்தை (பழைய மார்கட்)இல் அமைந்துள்ள 09 கடைகளுக்கும் தனித்தனியாக மின் இணைப்புச் செய்வதற்கும், மின் உபகரணங்களைப் பொருத்துவதற்கும் 09 கடைகளிலும் சபையால் முடிவு செய்யப்பட்ட குறிப்பிட்ட பொருட்களை விற்பனை செய்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

முன்னால் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச அவர்கள் தேர்தல் அண்பளிப்பாக சம்மாந்துறை பிரதேச சபைக்கு வந்த பணத்தில் 03 ஜெனரைட்டர்களை நவலோக்கா றேடிங்கில் இருந்து பெற்றிருந்தோம் துரதிஸ்ட்ட வசமாக அதற்கு சேவிஸ் ஒப்பந்தம் செய்யாமல் அவர்களை அழைத்து 2016 ஆம் ஆண்டு சேவிஸ் செய்து விட்டு அதற்கான பணமும் கொடுக்க வில்லை. காரணம் ஒப்பந்தம் இல்லாததனால்தான். அவர்கள் செய்த வேலைக்கு பணம் கொடுக்காமல் இருப்பதும் நியாயமில்லை. அதே நேரம் 2019 ஆம் ஆண்டுக்கு 03 ஜெனறைட்டர்களையும் இணைத்து ஒரு சேவிஸ் ஒப்பந்தம் செய்ய வேண்டும்.

**தீர்மானம் 12**

எமது சபைக்குச் சொந்தமான 03 ஜெனறைட்டர்களையும் 2019 ஆம் ஆண்டிற்கு நவலோக்க றேடிங் நிறுவனத்திற்கு சேவிஸ் ஒப்பந்தம் செய்வதற்கும், 2016 ஆம் ஆண்டில் அவர்களால் செய்யப்பட்ட சேவிஸ்க்கான கட்டணங்களைச் செலுத்தி கணக்கை முடிப்பதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஒவ்வொரு நிறுவனத்திலும் ஆவணங்கள் ஸ்கேன் செய்யப்பட்டு அனைத்தும் பாதுகாக்கப்படுகின்றது. இன்று சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் மனவருத்தம் என்னவென்றால் காணிப் பிரச்சினை சம்பந்தமாக பார்தால் அங்கு ஒரு ஆவணங்களும் இல்லை. இவை அனைத்ததையும் சேர்த்து நான் ஒரு காப்பகமாக மாற்றி, பல்கலைக்களக உபவேந்தருடன் கதைத்து கிழக்கு மாகாண நிர்வாக சரித்திரம் அதாவது மாற்றங்கள் எவ்வாறு அடைந்துள்ளது என்பது பற்றியும் அதன் ஆவணங்களைப் பாதுகாப்பதற்கும் $A^3$ ஸ்கேனர் ஒன்றைக் கொள்வனவு செய்ய வேண்டும். அதிகமாக வருமானப் பகுதியில் உள்ள ஆவணங்கள் ஒவ்வொன்றையும் இஸ்கேன் செய்து களஞ்சியப்படுத்தினால் பின்னுறுத்தாளிகள் வந்து மாற்றுவதற்கு இலகுவாக இருக்கும். இதன் விலை 135,000 ரூபா இதனைக் மெற்றோ பொலிட்டன் ஏஜென்சியில் கொள்வனவு செய்வோம். இதனைச் செய்வது நாம்தான் முதல் ஆட்களாக இருப்போம்.

**தீர்மானம் 13**

சபையில் உள்ள ஆவணங்களை ஸ்கேன் செய்து பாதுகாப்பாக வைப்பதற்கு மெற்றோ பொலிட்டன் ஏஜென்சில் இருந்து $A^3$ ஸ்கேனர் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

நமது சபைக்குச் சொந்தமான 04 முன்பள்ளிகள் இணைந்து நடாத்தும் நிகழ்வுகள் 2018.12.18 ஆம் திகதி இன்று நடைபெற உள்ளது. வசதி குறைந்த பிள்ளைகளின் நிகழ்வுகள் தயவு செய்து அனைத்து கௌரவ உறுப்பினர்களும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

**தீர்மானம் 14**

எமது சபையினால் நடாத்தப்படும் 04 முன்பள்ளி பாடசாலைகள் இணைந்து நடாத்தும் வருடாந்த கலை நிகழ்வு, பரிசளிப்பு விழா போன்றவற்றை நடாத்துவதற்கும் அதற்கான பரிசளிப்புப் பொருட்கள் வாங்கவும், உபசரனை செலவுகளை மேற்கொள்வதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**தீர்மானம் 15**

சபையில் நடக்கும் விசேட வைபவங்களின் போது உணவு மற்றும் தேனீர் உபசரணைக்காக Dinner Set, Tea Cup & Saucer Catter மற்றும் அதற்குரிய தளபாடங்களை கொள்வனவு செய்வதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என். கோவிந்த சாமி |

**தீர்மானம் 16**

2019 ஆம் ஆண்டில் 10 மில்லியன் சபை நிதியினை ரூபா 2.5 மில்லியன் கொண்டதாக 04 வைப்புக்களாக 03 மாதங்களுக்கு புதுப்பிக்கத்தக்கதாக பிரதேச அபிவிருத்தி வங்கி (RDB) யில் நிலையான வைப்புச் செய்ய சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எல்.எம். ஜிப்ரி |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல். சிஹாமா |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நமது ஊரில் உள்ள ஹிஜ்றா சந்தி சுற்றுவட்டம் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு கருத்துக்களை எழுதி வருகின்றனர். அதில் உள்ள கம்பிகள் ஆபத்தாக உள்ளதனால் தற்போது அதனைக் களட்டி விட்டு புதிதாக சில்வர் குளாய்கள் போடப்பட்டு அதனை அழகு படுத்தி கல் பதித்து மர்ஹூம் ULM.முகைடீன் அவர்களின் பெயரை சீராக பதித்து அழகு பார்க்கும் முயற்சியை நமது சபை நல்ல நோக்கத்தில் செய்கின்றது என்று பாராமல், அதற்கு என்னை மையமாக வைத்து விமர்சித்து எழுதும் போது நான் உண்மையில் மிகவும் மன வேதனையடைகின்றேன். அந்த நேரம் வருகின்ற எதிர்மறைக் கருத்துக்களுக்கு நாம் பதில் கூறக்கூடாது.

ஆனால் இவைகள் முடிந்தவுடன் அழகாக இருக்கின்றது என்றும் விமர்சிப்பார்கள். அந்த விமர்சனங்கள் எந்த கௌரவ உறுப்பினரிடமும் இருந்து வரவில்லை. நான் மிகவும் சந்தோசப்படுகின்றேன். அவை உங்களுக்கு என்மேல் உள்ள நம்பிக்கையை காட்டுகின்றது. தயவு செய்து சபை வேலைகளில் உங்களுக்கு எந்தவிதமான சந்தேகம் இருந்தாலும் நேரடியாக

என்னிடம் நீங்கள் கேட்க வேண்டும். ஏனென்றால் அதற்கான அதிகாரம் உங்களுக்கு உள்ளது. நான் உங்கள் சார்பாகத்தான் இவ்விடத்தில் உள்ளேன். நீங்கள் தரும் உட்சாகம்தான் எனகும் ஆர்வத்தை உண்டாக்கும். அதில் அரசியலுக்கு அப்பால் பொது நலத்தை யோசித்து செயற்படுங்கள் என்பது எனது பணிவான வேண்டுகோள். இந்த சபை கிழக்கிலங்கையில் மட்டுமல்ல இந்த நாட்டுக்கே முன்னுதாரனம். அந்தப் பெருமையை நாம் தொடர வேண்டும். நமக்கு மேல் உள்ள நிர்வாகிகள் நமது சபையைத்தான் உதாரணமாகக் காட்டுகின்றார்கள்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த இடத்தில் சந்தோசமாக கூற விரும்புகின்றேன். மூன்று நாட்களுக்கு முதல் பொத்துவில் பிரதேசத்திற்கு சென்ற போது அங்கே பொத்துவில் பிரதேச சபையின் தவிசாளரும் எதிர்கட்சித் தலைவரும் கூறும் போது அவருடைய பிரதேசத்திலே அங்கத்தவர்களிடையே ஏற்பட்ட போட்டி பொறாமையின் காரணமாக கிட்டத்தட்ட 15 கோடி ரூபாக்களை பொத்துவில் பிரதேசம் இழந்து தவிக்கின்றது. ஒரு கட்சியில் இருந்து கொண்டு வருகின்ற வேலைத்திட்டத்திற்கு மாற்றுக்கட்சி உறுப்பினர்கள் அதில் குறைகளைக் கண்டு உரிய அதிகாரிகளிடத்தில் அது பற்றிக் கூறி அந்த வேலைத்திடத்தை தடுத்திருக்கின்றார்கள். கம் பெரலிய வேலைத்திட்டத்தில் 05 கோடியும், நகர திட்டமிடல் அமைச்சின் வேலைத்திட்டத்தில் 10 கோடியையும் இழந்துள்ளார்கள். அந்த இடத்தில் தைரியமாக எழுந்து தலை நிமிர்ந்து கூறினேன் எங்களுடைய சபை ஒரு முன்னுதாரனமான சபையாக இருக்கின்றது. யார் எதைக் கொண்டு வந்தாலும் நாங்கள் மனமுவர்ந்து வரவேற்கின்றோம்.

எனவே, தவிசாளர் அவர்களுக்கு இங்கிருக்கின்ற கௌரவ உறுப்பினர் அனைவரும் ஒத்தாசையாக இருக்க வேண்டும். எங்களிடையே ஆரோக்கியமான ஜனநாயக ரீதியான கருத்து மோதல்கள் இருக்கலாம். ஆனால் இந்த சபையில் ஒரு தீர்மானத்தை எடுக்கின்ற போது அத்தீர்மானத்திற்கு சகல அங்கத்தவர்களும் சம்மதம் தெரிவித்து விட்டுதான் நாங்கள் வெளியில் செல்ல வேண்டும். சபைக்குள் வருகின்ற போது நாங்கள் வேறு வேறு கருத்துக்களுடன் வந்தாலும் இங்கே அனைவரும் கலந்தாலோசித்து வாக்குவாதப்பட்டு ஆக்ரோசமாகக் கதைத்து இறுதியாக எடுக்கின்ற தீர்மானத்திற்கு உடந்தையாக இங்கிருக்கின்ற அங்கத்தவர்கள் நாங்கள் இங்கிருந்து வெளியாகும் போது அதனை மனதில் கொண்டு தவிசாளர் கூறியது போல் அகில இலங்கையிலுமே முன்னுதாரனதான ஒரு சபையாக வெற்றி பெறுவதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெவ்வை அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, ஹிஜ்றா சந்தி சுற்று வட்டம் தொடர்பாக உண்மையில் அதில் இருந்த வடிவமைப்பு எங்களுக்கு பல குறைபாடாக இருந்தது. தற்போது புதுப் பொளிவுடன் அந்த சுற்று வட்டம் சம்மாந்துறைக்கு மத்தியில் அழகாக காட்சியளிக்கின்றது. அந்தக் குறைபாடுகளை இல்லாமல் செய்து அந்த வடிவமைப்பை ஏற்படுத்தி சம்மாந்துறைக்கு வழங்குகின்ற நமது சபையின் தவிசாளருக்கு எனது தனிப்பட்ட முறையிலும், சகல உறுப்பினர்களையும் சேர்த்தவனாக நன்றியைத் தெரிவிக்கின்றேன்.

அத்தோடு எமது சபையில் இன்றய கருத்து வெளிப்பாடுகளின் போது SLIATE, CTB Work Shop தொடர்பாக பலதரப்பட்ட பிரச்சினைகள் இங்கு ஆராயப்பட்டன. இவைகள் அனைத்தும் பிரதேச சபையில் பேசப்படவேண்டியவைதான். ஆனால் பிரதேச சபையின் நோக்கங்கள் மக்களுக்கான பயன்பாடுகள் அனைத்தையும் பிரதேச சபை சட்டத்தின் மூலம் வரையறுக்கப்பட்டிருக்கின்றது. அதற்கு மேலாக எமது ஊரினதும், மக்களினதும் பிரச்சினைகளைப் பேசுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை.

பிரதேச செயலகத்தில் அபிவிருத்தி சபைக்கூட்டங்கள் நடைபெறுகின்றது. அதற்கு மக்கள் பிரதிநிதிகள் வரையறுக்கப்பட்டு ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொருத்தர்தான் வர வேண்டும் என பிரதேச செயலாளயர் மூலம் இந்த சபைக்கு அறிவித்திருப்பதென்பது என்னைப் பொறுத்தமட்டில் சாலச் சிறந்த தீர்மானமாக இருக்க முடியாது எனக் கருதுகின்றேன். ஏனென்றால் இங்கு இருப்பவர்கள் அனைவரும் கௌரவ மக்கள் பிரதிநிதிகள். எனவே அவர்களின் வட்டாரங்களில்

ஏற்படுகின்ற பிரச்சினைகளை இங்கு பேசுவதற்குக் காரணம் DCCயில் இங்கு இருக்கின்ற அனைவரும் பங்குபற்ற வேண்டும் என்பதுதான் எனது கோரிக்கை. ஒருத்தர்தான் பங்கு பற்ற வேண்டும் என வரையறுத்ததை பிழை என்று நான் கருதுகின்றேன். இந்த இடத்தில் கௌரவ உறுப்பினர்களின் கௌரவத்தைப் பாதுகாப்பது கௌரவ தவிசாளரின் பொறுப்பாகும். இது சம்பந்தமான சபைத் தீர்மானம் எடுத்து பிரதேச செயலகத்திற்கு உத்தியோக பூர்வமாக அறிவிக்க வேண்டும் என்று உறுப்பினர்கள் சார்பாக கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதற்கு பிரதேச செயலகம் பொறுப்பல்ல. இது தேசிய ரீதியில் எடுக்கப்பட்ட முடிவுகள் அதாவது சம்மாந்துறையில் 20 உறுப்பினர்கள்தான் உள்ளனர். ஆனால் கொழும்பில் 100 க்கும் மேற்பட்ட உறுப்பினர்கள். அவர்கள் அனைவரையும் உள்வாங்க முடியாது என்றுதான் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நான் இந்தக் கருத்தை சம்மாந்துறை DCCயில் ஒரு முன்மொழிவாக வைத்து 20 பேர் என்பதனால் அவர்களுக்கு முதற் கூட்டத்திற்கு அனுமதித்தது போல் ஏனைய கூட்டத்திற்கும் அனுமதி வழங்க வேண்டும் என்று ஒரு வேண்டுகோள் விடுத்துள்ளேன்.

2018.12.29 ஆம் திகதி சபையின் ஒன்றுகூடல் இடம்பெற உள்ளது. ஊழியர்களினது குடும்பம், சபை அங்கத்தவர்களின் குடும்பம் அனைவரும் ஒன்று சேர்ந்து விளையாட்டுக் கட்டடத்தில் அல்லது அப்துல் மஜீட் மண்டபத்தில் நடாத்த உள்ளோம். தயவு செய்து உங்களது குடும்பத்தில் யார் யார் வருகின்றார்கள் என்ற விபரங்களை செயலாளரிடம் தெரிவித்துக் கொள்ளலாம். நீங்கள் அனைவரும் வர வேண்டும். அனைத்து ஊழியர்களின் குடும்ப அங்கத்தவர்களையும் நீங்கள் சந்திக்க முடியும். சரித்திரத்தில் சம்மாந்துறை பிரதேச சபைதான் முதலில் செய்தது. அதனை மீண்டும் உருவாக்க வேண்டும்.

கட்டாக்காலி மாடும், மாடடுக்காரர்களும் நமக்கு பாரிய சவாலாக உள்ளது. சபையின் சரித்திரத்தில் மூதாதேயர்கள் மாட்டுப்பட்டிகள்தான் வைத்திருந்தார்கள். இது நமது பாரம்பரியம். அந்தக்காலத்தில் ஒவ்வொரு வீட்டிலும் மாட்டுக் கொட்டில் இருக்கும். அவ்வாறுதான் நமது ஊர் இருந்தது. தற்போது இவைகள் மாறிவிட்டது. தற்போதுள்ள பிரச்சினை வெளி இடங்களில் உள்ள மாடுகளை ஊரில் காலை கட்டி விடத் தொடங்கி விட்டார்கள். நமது ஊரில் இருந்து வெளியில் கொண்டு செல்வதற்கு அச்சப்படுகின்றனர். அதனால் பாரம்பரியமாக செய்து வந்த தொழில் தற்போது குறையாக உள்ளது.

ஊர் அருகில் இருக்கின்ற மாட்டுப் பட்டிகள் கட்டும் இடங்களை மாற்றுவதற்கு மாற்று வழியைத் தேட வேண்டும். இந்தப் பிரச்சினையை எவ்வாறு சுமூகமாகத் தீர்ப்பது அதற்கு ஒரு ஏரியாவை இணங்கண்டு கொடுக்க வேண்டும். அல்லது ஊருக்குள் மாடு கட்டக் கூடாது என்ற சட்டத்தைக் கொண்டு வர வேண்டும். இதனை எவ்வாறு செய்வது என்ற உங்களது கருத்துக்களையும் நான் வரவேற்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் என். கோவிந்தசாமி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அது பாரிய வளவு 06, 07 ஏக்கர் கொண்டது. பிரதான வீதியில் இருந்து சற்றுத் தூரத்தில் இருந்தால் யாருக்கும் இடைஞ்சல் இல்லாமல் இருக்கும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் அவர்களுடன் பேசி முடிவெடுப்போம். இது போல் பிரச்சினை பெரிய பள்ளி வாசல் ஏரியாவிலும் உள்ளது.

**கௌரவ உப தவிசாளர் வீ. ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எனது வட்டாரத்திலும் இது போன்ற பிரச்சினை உள்ளது. பிரதான வீதியில் போடாமல், அமதற்குப் பின்னால் உள்ள காணிகளில் போடலாம். அடுத்து இஸ்மாயில் புரத்தில் முடியுமானால் வந்து பாருங்கள். மக்களும் மாட்டுக் கொட்டிலும் பக்கத்து பக்கத்தில் உள்ளது. மழை காலங்களில் சேரிப்புரம் போன்று காட்சியளிக்கின்றது. மனிதனை மதித்து

செய்வதில்லை. அதற்குப் பின்னால் கானிகள் இருந்தும் அவர்கள் அதனை கவனத்தில் கொள்வதில்லை. எனவே, அவைகளை பின்னால் உள்ள காணிகளுக்குள் அப்புறப்படுத்த வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நாம் நாம் பிரதேச செயலாளருடன் இணைந்து கள ஆய்வு செய்து மாற்று வழிகளைச் செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல் சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்காலத்தில் டெங்கு நுளம்பு அதிகரித்துச் செல்வதற்கு நாமும் ஒரு காரணமாக இருக்கின்றோம் என்று நினைக்கின்றேன். ஏனென்றால் எமது பிரதேசத்தில் அமைந்துள்ள பல்களைக்கழகத்திற்கு அருகிலும் அதற்குப் பின்னாலும் உள்ள நீர் பாசனத் திணைக்களத்திற்குரிய வளவிற்குள் அதிகமான குப்பைகளை ஊர் மக்கள் போட்டு வருகின்றனர். அந்த வளியால் செல்ல முடியாமல் உள்ளது. துர்நாற்றம் வீசுகின்றது. இதனை நமது சபையால் அவர்களுக்கு அறிவித்தல்களை விடுத்து அதனை சுத்தப்படுத்த வேண்டும்.

அம்பாறை 12இல் சுட்டார் லேனில் குப்பைகளை அகற்றுவதில்லையாம் என்றும், காரணம் என்னவென்று நான் கேட்ட போது வீட்டு வரி கட்டாததனால் எடுக்கவில்லையாம் என்ற தகவல் வந்தது. வீட்டு வரி அறவிடுபவர்கள் அதனை அறவிட்டு அந்தக் குப்பைகள் அகற்றப்பட வேண்டும் என்று நான் தெரிவிப்பதுடன்,

கைகாட்டியில் விளையாட்டு மைதானம் அமைக்கப்பட்டுள்ளது. அதனை நான் சென்று அவதானித்த போது அதற்கு 20 அடி தூரத்தில் வேலி அமைக்கப்பட்டுள்ளது. 10M தூரம்தான் மண்ணை நிறப்பி அதற்குள் விளையாட்டு மைதானம் அமைத்துள்ளார்கள். அதற்கு அருகாமையில் நீர் உள்ளது. வெள்ளம் வந்தாலும் அதனைப் பாதிக்கும். பிள்ளைகள் விளையாடினாலும் அந்த நீருக்குள் விழக்கூடிய சந்தர்ப்பமும் காணப்படுகின்றது. அதற்கும் ஊழியர்களும், சபை உறுப்பினர்களும் அதற்குரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதே போல் எதிர்வரும் 22 ம் திகதி தேசிய பாடசாலையில் பழைய மாணவர்கள் நடைபாதை நிகழ்வு ஒன்று செய்ய உள்ளனர். நமது சபை ஊடாக அவர்களுக்கு நாங்கள் ஏதாவது ஒன்று செய்ய வேண்டும். நமது Cap ஐயும் அதற்கான எரிபொருளையும் வழங்கலாம் என்று நான் இந்த சபையில் கேட்டுக் கொள்கினறேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
சபை வாகனங்கள், சபை சொத்துக்கள் நினைத்த மாதிரி உபயோகிக்க முடியாது. ஆனால் தன்நீர் பௌசரை வழங்கலாமே தவிர வேறு வளம் வழங்க முடியாது.

கைகாடடி சிறுவர் பூங்கா செய்யப்பட்டுள்ளது. அதற்கான பாதுகாப்பு வேலிகள் போடலாம்.

குப்பை அகற்றுவது தொடர்பாக, பிரதேச சபை அகற்றும் குப்பைகள் என்ன என்பது இன்னும் மக்களுக்கு தெளிவாக விளங்க வில்லை. அவர்களின் எண்ணம் நாங்கள் எதனைப் போட்டாலும் பிரததேச சபை ஊழியர்கள் எடுத்துக் கொண்டு போவார்கள். அந்த எண்ணம் பிழையானது. திண்மக்கழிவு முகாமைத்துவம் செய்வது பொது சுகாதாரத்தை முன்வைத்து பழுதடையக்கூடிய குப்பைகளை எடுப்பதற்குத்தான் இருக்கின்றதே தவிர வளவிற்குள் இருக்கின்ற அனைத்து கல், மண் போன்றவைகளை எடுப்பதற்கல்ல.

இது தொடர்பாக பல சபைகள் எவ்வளவோ முறைகளைக் கையாளுகின்றனர். எனக்கு ஒரு எண்ணம் வந்தது. சபையில் அனுமதி எடுத்து ஒவ்வொரு நாளைக்கும் திண்மக்கழிவு அகற்றும் வீதியில் வாகனத்திற்குப் பின்னால் வீடியோவை அனுப்பி அதனைப் படமாக்கி எடுத்து அன்றய குப்பைகள் அனைத்தும் பிரதேச செயலகத்தின் அனுமதியுடன் நமது ஆலையடி வட்டைக்குள்

கொட்டி அதனை படம் எடுத்து அந்த வட்டார மக்களையும் அழைத்து இன்று நாங்கள் சேகரித்த குப்பைகள் என்று அதனைக் காட்ட வேண்டும்.

இன்று சில இடங்களில் பேக்கிற்குள் கீழ் கல் மண்ணைப் போட்டு மேலால் சமையலறைக் குப்பைகளைப் போட்டு கொடுப்பது. ஊழியர்களும் பாவம். இவைகள் அனைத்தையும் 900 ரூபா கொடுத்து காரைதீவிற்குக் கொடுக்கின்றோம். திண்மக்கழிவு முகாமைத்தவத்திற்கு அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். கொழும்பில் வசிப்பவர்களுக்குத் தெரியும். ஒரு நாளைக்கு சமையலறைக்கழிவு போன்ற உக்கக்கூடிய கழிவுகளை மட்டும்தான் எடுப்பார்கள். மற்ற நாளைக்கு பிளாஸ்டிக், பொலித்தீன் போன்ற உக்காத கழிவுகளை எடுப்பார்கள்.

அவர்கள் போடும் அனைத்துக் குப்பைகளையும் நாங்கள் எடுக்கலாம். அதற்கு தராசு எடுத்துச் சென்று ஒவ்வொரு வீட்டிலும் இருந்து பெறப்படும் குப்பைகள் குறிப்பிட்ட கிலோதான் எடுப்போம் என்று முடிவெடுக்க வேண்டும். இந்தக் கட்டுப்பாடுகள் கொண்டு வராவிட்டால் மாற்றம் செய்ய முடியாது. சில பொறுப்புடன் செயற்படும் மக்களும் உள்ளார்கள். ஊழியர்களை மனிதனாக மதித்து மக்கள் செயற்பட வேண்டும். இது அவர்களது பொதுச் சுகாதாரத்திற்கு செய்வது என்று மக்கள் உணர வேண்டும். அதற்கு எனது திட்டம் மக்களின் முகங்களை மறைத்து படம் எடுத்து மக்களிடம் காட்ட வேண்டும் என்பதுதான். அந்த வேலையைச் செய்து ஜனவரி மாதத்தில் திண்மக்கழிவு முகாமைத்துவத்திற்கு ஒவ்வொரு வட்டாரத்திலும் உள்ள கௌரவ உறுப்பினர்களையும் உள்வாங்கி மக்களையும் அழைத்து நான் பேச வேண்டும். கடமையை செய்து விட்டுத்தான் உரிமையைப் பேச வேண்டும் என்று மக்கள் உணர வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் ஏ.சி.எம். சஹீல் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் குறிப்பிட்டது உடங்கா 02 ஆம் பிரிவில் இருக்கின்றது. அதாவது விஞ்சான பீடத்திற்கு அருகில் இருக்கும் குளம். அது மழைகாலங்களில் நீர் நிரம்பி பாதைகள் அனைத்தும் சேதமடைகின்றது. ஆகவே அந்த இடம் யாருடைய பொறுப்பில் உள்ளது என்பதை அறிய வேண்டும். அவ்விடத்தை மண் நிறப்பி அவைகளை புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அல்லது எமது சபை அதனைப் பொறுப் பெடுத்து அந்த இடத்தில் சிறுவர் பூங்கா ஒன்றை நிர்மானிப்பதற்கான ஒரு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று இந்தச் சபையில் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

நீங்கள் குறிப்பிடும் இடம் நீர் தேங்கும் இடம். வாய்காலில் இருந்து வருகின்ற நீர் அதற்குள் செல்லும். அதுதான் நமது மூதாதேயர்களைப் பாதுகாத்து வந்தது நமது ஊரில் உள்ள சிறிய சிறிய குளங்கள்தான். துரதிஸ்ரவசமாக இன்று கோடைகாலங்களில் ஆடு, மாடு போன்ற மிருகங்கள் குடிப்பதற்குக் கூட நீர் இல்லை. நமக்கு குழாய் நீர் வருகின்றது. ஆனால் மிருகங்களைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டும். அதனை ஒழுங்கு படுத்தி மரங்களை நாட்டி 02, 03 கதிரைகளைப் போட்டு லைட்களும் போட்டால் அவ்விடத்தில் மக்கள் ஓய்வெடுப்பார்கள். நிச்சயமாக 03 மாத காலத்திற்குள் ஒழுங்கு படுத்த வேண்டும். ஆனால் தயவு செய்து மன்னில் வாழ்கின்ற மிருகங்களைப் பற்றியும் சிந்தியுங்கள்.

**கௌரவ உறுப்பினர் ஐ.எல்.எம். மாஹிர் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அண்மையில் நைனாகாட்டுப் பிரதேசத்தில் மழைகாலங்களிலே நீர் வழிந்தோட வளியில்லாமல் காண்கள் அடைக்கப்பட்டு வெள்ளத்தினால் வீடுகளுக்குள் நீர் செல்கின்றது. அதனை புகைப்படம் எடுத்து வந்து என்னிடம் காட்டினார்கள். அந்தப் பிரதேசத்திற்குரிய கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களுடன் சென்று பார்வையிட்டேன். எங்களது பிரதேச சபைக்குச் சொந்தமான வடிகான் நீர் வழிநது ஓட முடியாத நிலையில் மண் நிரம்பி இருக்கின்றது. அதனை மிக விரைவில் அதாவது நாளை என்றாலும் பரவாயில்லை நமது வாகனங்களை அனுப்பி அவைகளை அகற்ற வேண்டும்.

நீர்பாசனத் திணைக்கள பொறியியலாளரையும், வீதி அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகளையும் அழைத்துச் சென்ற போது ஊர் மக்களினதும் அதிகனாரிகளினதும் முடிவின்படி ஒரு குறிப்பிட்ட

தூரத்திற்கு புதிதாக கான் போட வேண்டியுள்ளது. இந்த வருடத்தில் அதனை செய்ய முடியாமல் இருப்பதனால் எதிர்வரும் 2019 ஆம் ஆண்டில் கான் கட்டுவதற்கான ஒரு பிரேரனையும் கொண்டு வருகின்றேன். அதற்கு இடையில் JCB, Tractor ஐயும் அனுப்பி அதனை செய்து தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நைனாகாட்டைப் பொறுத்தவரையில் நமக்கு பாரிய ஒரு சவால். ஒரு கிழமைக்கு மழை பெய்தால் பட்டாம்பிட்டி ஆற்றின் மட்டம் வரை நீர் வந்தால் அங்கு குடியிருக்கும் நிலங்கள் பணிவு அதனால்தான் இந்த நீர்ப்பிரச்சினை வருகின்றது. காலாகாலமாக மண்வந்து அந்த ஆறு நிரம்பிவிட்டது. சில நாட்கள் தொடர்ச்சியாக மழை பெய்தால் அந்த ஆறு நிறம்பிவிடும். எவ்வாறு அந்த நீரை ஓடும் நீருடன் சேர்க்கலாம் என்ற மாற்று வளியை பார்க்க வேண்டும். இதே பிரச்சினை வீரமுனை RKM பாடசாலைக்கு அருகிலும் உள்ளது. அதனை உடனடியாக நீர்பாசனத் திணைக்கள பொறியியலாளரை அழைத்து அதனைப்பார்த்து செய்ய வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் கே.எல் சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 02 மாதத்திற்கு முன்பாக ஹாஜியார் லேனில் உள்ள பாலம் பற்றிக் கூறினேன் இன்னும் அவை புனர்நிர்மானம் செய்யப்படாமல் காணப்படுகின்றது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அதற்க்கு காரணம் மழைகாலமாக இருந்ததால் செய்யவில்லை. தூன் எழுப்பப்பட்டுள்ளது. அதனை செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எம் இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, மல்வத்தையில் வாராந்தச் சந்தை எனது தம்பிநாயக புரத்தில் பிரதான வீதியை மையமாக வைத்து நடாத்தப்படுகின்றது. காலையில் 05 மனிக்கு வந்து இருமருங்கிலும் கயிற்றை கட்டுகின்றார்கள். இதனால் அதிகமான விபத்துக்கள் ஏற்படுகின்றது. எனவே அவர்களுக்குரிய இடத்தை வழங்கி விபத்துக்களை குறைத்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஆரம்பத்தில் வந்த பெரும்பான்மை இனத்தவர்கள் சந்தையை அவர்களது கட்டுப்பாட்டில் வைத்து மக்கள் வராமல் தடுக்கின்றனர். அதனையும் இவர்களுக்கான இடத்தையும் தீர்மானித்துக் கொடுத்தால் சிறப்பாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விடயத்தில் மல்வத்தை ஒரு பட்டனமாக மாற வேண்டும் என்று எனது நீண்டநாள் கணவு. அதில் ஒரு அம்சமாக எமது உப தவிசாளர் விடா முயற்சியும், உங்களது ஒத்துழைப்பாலும் அவ்விடத்தில் பெரிய மாற்றத்தை கொண்டு வந்துள்ளார். இதனைக் கட்டுப்படுத்த வேண்டும். அந்த ஒழுங்கைக்குள் வரும் கடைகளை நிறுத்த வேண்டும்.

**கௌரவ உப தவிசாளர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இடம் போதாதனால் அந்த வீதியில் வியாபாரம் செய்கின்றார்கள். அதற்கு மாற்று வேலையை செய்து பிரச்சினை வராமல் பார்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
02 பக்கமும் கடை வைப்பதற்கு அந்தப்பாதை போதாது ஒரு பக்கத்தில்தான் வைக்கலாம் இல்லாவிட்டதல் அதில் வேறு பிரச்சினைகள் வரலாம்.

**கௌரவ உப தவிசாளர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, ஆரம்பத்தில் அதிகமானவர்கள் வரவில்லை. தற்போது அதிகமானர்கள் வருகின்றார்கள். அவர்களும் அவர்களது ஆதிக்கத்தைச் செலுத்துகின்றார்கள். இதனை சுமூகமாக தீர்க்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
பேரினம் என்று கூறும் போது வாராந்த சந்தையை உருவாக்கியவர்கள் அவர்கள்தான். அவர்களுக்குத்தான் அதன் நுனுக்கம் தெரியும். அது மட்டுமல்ல அந்தக் கடைகள் மிகவும் சீராக இருக்கின்றது. ஒரு மனிதன் போய் என்ன வாங்க வேண்டுமோ அதனை போனவுடன் மக்களைக் கவரும் வகையில் வைத்துள்ளார்கள். சிறந்த முறையில் அதனைச் செய்கின்றார்கள்.

**கௌரவ உப தவிசாளர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அங்கு இருக்கின்ற சுகாதார நிறுவனம் திருத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றது. அதற்குதிய வழியும் சந்தையை அண்டியதாக எடுப்பதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. அதுவும் வரும்போது இன்னும் சன நெரிசல் அதிகரிக்கும்.

அந்த சந்தியில் இரவு நேர றோந்து நடவடிக்கைக்காக ஒரு பொலிஸ் ஏற்பாடுகளை செய்ய வேண்டிய சூழல் காணப்படுகின்றது. காரணம் கடைகள் அதிகரிக்கின்றது. எனவே இரவில் யாராவது ஏதாவது செய்தால் அசம்மாவிதங்கள் ஏற்படலாம். OIC இற்கு எழுதி அதற்கான தீர்வைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
OIC க்கு எழுத்து மூலம் கேட்கலாம். நான் உங்களிடம் பிரதான வீதிக்கு அருகில் உள்ள வளவினை அன்றய தினத்திற்கு வாடகை கொடுத்தாவது எடுக்க முடியுமா? அதனைச் செய்தால் பிரச்சினைகள் குறையலாம். நாம் புதன்கிழமைக்கென்று ஒரு தொகையினை செலுத்தி அதனை எடுத்தால் இந்தப் பாதை பாவனை குறைந்து பிரதான வீதி வந்துவிடும்.

**கௌரவ உப தவிசாளர் வீ.ஜெயச்சந்திரன் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, அதற்கான பேச்சுவார்த்தைகளைச் செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் ஏ. அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த ஊருக்கு சேவை செய்தவர்களை நாம் மதித்து வருகின்றோம். அண்மையில் அக்கரைப்பற்றுக்கு சென்ற போது குறிப்பிட் காலம்தான் இருந்த ஒரு பாடசாலைக்கு Dr.ஜலால்டீன் வித்தியாலையம் என்று போடப்பட்டிருந்தது. ஆரம்பத்தில் சம்மாந்துறையில் 03 பாடசாலைகள்தான் இருந்தது. அதனை 33 ஆக உயர்த்தியவர்தான் அப்துல் மஜீட் அவர்கள். அவரின் பெயர் குறிப்பிடும் பாடசாலை ஒன்றும் இல்லை. எனவே தேசிய பாடசாலைக்கு அப்துல் மஜீட் தேசிய பாடசாலை என்று வைப்பதில் நமது சபை ஒற்றுமையாக நமது நிபந்தனையாக சமர்ப்பிக்க வேண்டிய இடத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

சுனாமி நேரத்தில் 1000 க்கணக்கான சவங்களை அடக்கம் செய்வதற்கு தற்போதுள்ள மையவாடி இல்லாவிடத்தில் அந்த நிகழ்வு வேறு எந்த ஊரிலும் செய்ய முடியாது. இந்த இடத்தைப் பிடித்ததுடன், அதனை கெசட்பன்னியும் அந்தக் காலகட்டத்தில் அதற்கு சுற்று மதிலும் அமைத்த மகானுக்கு அந்த இடத்தில் இஸ்லாமிய ஆலோசனைகளையும் உள்வாங்கி அப்துல் மஜீட் என்றல் பெயர் குறிப்பிடலாம் என்றால் அந்த ஞபகார்தத்தையும் ஏற்படுத்த வேண்டும். எனவே இந்த விடயத்தை நமது சபை ஏகமனதாக முடிவெடுக்க வேண்டும். பாராளுமன்ற உறுப்பினர் மேஸா, போன்றவர்களையும் நினைவு கூறுமாறு பாதைகளின் பெயர்கள் வர வேண்டும். நாம் இருக்கும் காலத்தில் செய்தாலே தவிர ஏனைய காலத்தில் இவைகள் நடக்குமா என்பது கேள்விக்குறி.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
மர்ஹூம் அப்துல் மஜீட் இன்றும் பேசப்படுவதற்கு காரணம் பெயர்வைக்காததனால்தான். ஆனால் நிச்சயமாக பாடசாலை விடயம் சென்ற சபையிலும் பேசினோம். நாம் அந்த முன்மொழிவை கல்வி அமைச்சுக்கும், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அதனை எத்தி வைக்கலாம். மஹல்லா மஹல்லா மையவாடியில் கௌவை அமைச்சர் றிசாட் பதியுதீன் அவர்களின் ஒதுக்கீட்டின் கீழ் ஜனாசா மண்டபம் கட்டப்படுகின்றது. அதற்கு அப்துல் மஜீட் ஜனாசா மண்டபம் என்றுதான் பெயர் வைப்பது என நானும் கௌரவ அமைச்சரும் பேசிக் கொண்டிருந்தோம். மையவாடிக்கு பெயர் வைக்கலாமோ தெரியாது. ஆனால் அப்துல் மஜீட் மண்டபம் என்ற பெயரில் கட்டடம் ஏற்பாடு செய்யப்படுகின்றது.

**கௌரவ உறுப்பினர் யூ.எல். அஸ்வர் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, S29 வாய்காலில் ஊடறுத்துச் செல்கின்ற குளாய்களை இடம் மாற்ற வேண்டும் என்று கடிதம் அனுப்பியும் இது வரைக்கும் நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் எந்த முடிவும் எடுக்கப்பட வில்லை.

Chain Saw வாங்குவதற்கு தீர்மானம் எடுத்தும் இன்னும் வாங்க வில்லை. S29 வாய்காலில் உள்ள மரங்களை வெட்டுவதற்கு தேவைப்படுகின்றது. CEB யினால் செய்ய வேண்டியவைகளும் உள்ளது. அவைகளை மிக அவசரமாக செய்ய வேண்டும்.

**தீர்மானம் 17**
S 29 வாய்காலில் உள்ள நீர் குழாய் இணைப்புக்களை பாதையின் ஓரத்தில் உள்ள பிரதான குழாய்கு மாற்றி இணைப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தேசிய நீர் வழங்கள் வடிகாலமைப்பு சபையிடம் வேண்டுகோள் விடுப்பதற்கு சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஐ.எல்.எம். மாஹிர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி. முஹம்மட் சஹீல் |

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தயவு செய்து அதனை உள்வாங்குங்கள். Chain Saw வுடன் Tree Ploorer வாங்க வேண்டும். கல்லரிச்சல் வாய்கால் அருகில் உள்ள மரங்களை சீராக வெட்ட வேண்டும். அதற்கு Chain Saw வினால் வெட்ட முடியாது Tree Prunner ஆல்தான் வெட்ட முடியும்

நான் நேற்று CEB இடம் பேசினேன். புயல் வரலாம் என்று கூறுகின்றார்கள். வயர்களுக்கு மேலால் போகின்ற பூமரங்களை வெட்டி விடுங்கள். இல்லாவிட்டால் பாரிய ஆபத்துக்கள் வரலாம் என்று கூறினேன். எம்மால் பராமரிக்கப்படும் மரங்கள் நெல்லுப்பிடிச் சந்தி கல்லரிச்சல் போன்றவற்றில் உள்ள மரங்கள் சீர்படுத்துவதற்கு நிச்சயமாக அதற்கான உபகரணங்களை கொள்வனவு செய்ய வேண்டும்.

**தீர்மானம் 18**
பிரதேச பாதைகளில் போக்கு வரத்திற்கு இடைஞ்சலாகவுள்ள மரக்கிளைகளை செப்பனிடவும் சபையின் பாவனைக்கும் தேவையான Chain Saw, Tree Prunner கொள்வனவு செய்ய சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம் றியாஸ் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

**தீர்மானம் 19**

சபையின் நிதி உதவியாளரிடம் காசோலைக்கு 02 வது ஒப்பமிட நியமிக்கப்பட்ட ஜனாப்.AJM.ஜெசீல் என்பவர் சம்பளமற்ற விடுமுறையில் வெளிநாடு செல்ல இருப்பதனால் 2019 ஆம் ஆண்டில் இடமாற்றம் பெற்று வரும் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.YB.கதீஜா உம்மா என்பவருக்கு நிதி உதவியாளராக கடமை புரியவும், காசோலைக்கு 02 வது ஒப்பமிடுவதற்கும் சபை ஏகமனதாக தீர்மானிக்கின்றது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | யூ.எல். அஸ்வர் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ. பௌசுள்ளாஹ் |

2018 ஆம் ஆண்டுக்கான கடைசி அமர்வு இனிதே நிறைவு பெறுகின்றது.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.

செயலாளர்
சம்மாந்துறை பிரதேச சபை
சம்மாந்துறை.